உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 32 | பரிதாபி - மாசி - 10—3—73 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே - சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# தியாகத்திற்கு ஓர் விழா

அனைத்துப் பிறவிகளிலும் மேலானது மக்கட் பிறவி யென்றாலும், மக்களாய்ப் பிறந்தோர் எல்லாரும் மக்களாகவே வாழ்கின்றனர் என்று சொல்ல இயலாது. தனது நன்மைக்காகப் பிறருக்குத் தீங்கிழைத்து வாழ்வது விலங்கு வாழ்க்கையே. இவ்வாறு வாழ்கின்ற மக்களும் உள்ளனர். இவர்கள் அடையும் பயன் அடுத்த பிறப்பில் விலங்குகளாவதே.

பிறருக்குச் சிறிதும் தீங்கிழையாமல், தன் நலத்தையும் விட்டுக்கொடாமல் வாழ்வது மனித வாழ்க்கையாம்.

" நல்லது செய்தல் ஆற்றி ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் "

என்று பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் கூறியவாறு, மக்கள் மேற்கூறிய விலங்கு வாழ்க்கையாக வாழாமல், இந்த மனித வாழ்க்கையாக வாழினும் குற்றமில்லை. இம்மனித வாழ்க்கையின் பயன் அடுத்த பிறப்பில் நன்மக்களாய்ப் பிறப்பது. இனி, 'தன் நலம்' என்பதையே மறந்து, பிறர் நலத்திற்காகவே வாழ்தல் தெய்விக வாழ்க்கை. இத்தகைய வாழ்க்கை உடையவர்கள் மக்களே

யாயினும், தெய்வங்களாக மதிக்கத் தக்கவர்கள். இவர்கள் மறுமையில் தேவர்களாதலும் உண்மை என்பதையே,

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "

என்னுந் திருக்குறள் உணர்த்துகின்றது. இதில், "வாழ்வாங்கு வாழ்பவன்" என்றமையால், மக்களாய்ப் பிறந்தது, இத்தெய்விக வாழ்க்கை வாழ்ந்து, பின் தேவராதற்கே என்பது தெளிவாகின்றது. விலங்கிலிருந்து மேல் ஏறி மக்களாய்ப் பிறந்தவர்கள், பின்பு தேவராதல் சிறப்பேயன்றி, மீண்டும் மக்களேயாய் உண்டு உடுத்து வாழ்தலில் என்ன சிறப்பிருக்கின்றது !

பிறர் நலத்தின் பொருட்டுத் தன் நலத்தைத் துறத்தலே 'தியாகம்' என்று சொல்லப்படுகின்றது. தமிழில் 'ஒப்புரவு' என்பது இதுவே. 'ஒப்புரவு' என்பதற்கு, ஒருவனது உடைமை, உயிர் அனைத்தும் பலர்க்கும் ஒப்ப உரியன ஆதல் - அஃதாவது அனைவர்க்கும் பொதுவானவையாதல் என்பது பொருளாகும். திருக்குறள் 'ஒப்புர வறிதல்' அதிகாரத்தில் இந்நிலைமையையே திருவள்ளுவர், ஊருணி, உள்ளூர்ப் பயன் மரம், மருந்து மரம் ஆகிய உவமைகளால் விளக்குவதோடு, தன்பால் உள்ள அனைத்தையும், அனைவர்க்கும் ஒப்ப உரிமையாக்குதல், மக்கள் கைம்மாறு கருதாது செய்யத்தக்க கடமையுமாகும் என்பதை, மழையை உவமையாகக் காட்டி வற்புறுத்துகின்றார். அதனால், மழை இல்லையேல் உலகம் இல்லாமைபோல, ஒப்புரவாளர் ஒரு சிலராவது இல்லை என்றால், உலகம் இல்லையாய்விடும் என்பது தெளிவு. இத்தகைய ஒப்புரவாளர் சிலரேனும் இன்றும் இருந்து வருவதால்தான், உலகம் இன்னும் அழியாது இருந்து வருகின்றது என்பதையே,

" உண்டால் அம்ம இவ்வுலகம்......
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே "

என்னும் புறநானூற்றுச் செய்யுளும்,

" பண்புடையார்ப் பட்டுண் டுலகம்; அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன் "

என்னும் திருக்குறளும் தெரிவிக்கின்றன. எனவே, மக்கள் அனைவரும் இத்தகைய தியாக வாழ்க்கை வாழப் பிறந்தவர்களே ஆகின்றனர்.

தியாக உணர்வே உயிர்களைப் பாசப் பற்றிலிருந்து நீங்கச் செய்வது. அதனால் அவ்வுணர்வை இறைவன் உயிர்களுக்கு இயற்கை அமைப்பில் தோன்றுமாறு அமைத்துள்ளான். ஒரு

தனி உயிரை, 'காதல்' என்ற ஒன்றின் வழியாக மற்றோர் உயிரோடு இணைந்து வாழச்செய்து, ஒன்று மற்றொன்றின் நலத்திற்காகத் தனது நலத்தைத் துறக்க வைக்கின்றான். பின்பு, மக்கட் பேற்றில், 'பிள்ளைப் பாசம்' என்ற ஒன்றின்வழித் தன் நலத்தைத் துறக்கச் செய்கின்றான். இவை இரண்டும் எல்லா உயிர்களிடத்தும் இறைவன் அமைத்த இயற்கைத் தூண்டுதலாக அமைந்திருக்கக் காண்கின்றோம்.

உயிர்கள் அனைத்திலும் மேம்பட்ட மக்கள் உயிரின் தியாக உணர்வு, மேற்கூறிய அளவில் ஒழியாமல், மேலும் பலவகையில் தொடர்கின்றது. மக்களுக்குக் கீழ்ப்பட்ட பிற உயிர்கட்கெல்லாம் பிள்ளைப் பாசம் அச் சந்ததிகள் சிறிது வளர்ச்சி அடையும் நிலையோடு ஒழிகின்றது. மக்களுக்கு அவ்வாறில்லை. வளர்ந்த மக்களை அறிவுபெறச் செய்தல், அறிவு பெற்றபின் வாழ்க்கையைப் பொருளும், புகழும் பெருகும்வகையில் நன்கு அமைத்துக் கொள்ளப்பண்ணுதல் என்பவற்றோடு, அவர்கட்கு உண்டாகும் சந்ததிகள், சந்ததிகட்குச் சந்ததிகள் என்று இவ்வாறு பாசம் தொடர்ந்துகொண்டே செல்கின்றது. இன்னும் இப்பாசம் காரணமாகவே தன் சுற்றத்தார், தன் மனைவியின் சுற்றத்தார், சந்ததிகளது குடும்பத்தின் சுற்றத்தார், நண்பர் முதலிய பலரிடத்தும் அன்பு உண்டாகி, அவ் அன்பு காரணமாகத் தன் நலத்தை மக்கள் எவ்வளவோ விட்டுக்கொடுக்க வேண்டியவராகின்றனர். இவையெல்லாம் இயற்கைபோல நமக்குத் தோன்றினாலும், ஆண்டவன் உயிர்களைப் பக்குவப்படுத்திவளர்க்க அமைத்துள்ள அமைப்பு முறையேயாகும் என்பது ஊன்றி நோக்குகின்றவர்களுக்கு நன்கு புலனாகும். அதனால், உலகியலில் இவையெல்லாம் வேண்டற்பாலன என்று கருதியே திருவள்ளுவர், 'அன்புடைமை, சுற்றந்தழால், கண்ணோட்டம்' முதலிய அதிகாரங்களில் பலவற்றைக் கூறியதுபோலச் சான்றோர் பலரும் பலவகையில் கூறினர். ஆயினும், தியாக உணர்வு இந்த அளவிலே சுருங்கி நில்லாது, பெரிதாய் விரிந்து வளர்தல் வேண்டும் என்று அவர்கள் அறிவுறுத்துகின்றனர். அதனைத் திருக்குறளில் இல்வாழ்க்கை, விருந்தோம்பல், ஒப்புரவறிதல், ஈகை, புகழ், அருளுடைமை முதலிய அதிகாரங்களிலும், அவைபோன்ற பிற இடங்களிலும், காணலாம். ஆனால், அவற்றை விரும்பி ஏற்றுக் கொள்வோர் ஒருசிலரேயாவர்.

குறைவிலா நிறைவாய் உண்மையில் எல்லா நலங்கட்கும் இருப்பிடமாய் உள்ளவன் இறைவனே. அதனால் அவனே ஒப்பற்ற தியாகி. ஒரு சிறு பொருளையும் வேண்டாது, அனைத்தையும் உயிர்கள் பொருட்டாகவே வழங்குபவன், அதனால் அவன் தியாகன் மட்டு மல்லன்; தியாகராஜன். அவன் தியாக

ராஜனைச் சோழநாட்டில் எழுந்தருளிய வரலாற்றைச் சுருக்கமாக-வேனும் உணர்தல் நலம்.

சிவபெருமானை ஒரு காரணம் பற்றி உமையோடும் முருகனோடும் கூடியவராக வழிபட விரும்பிய திருமால் அத்தகைய வடிவம் ஒன்றை மிக அழகுற அமைத்து இடையரு அன்போடு வழிபட்டுத் திருப்பாற் கடலில் தாம் பள்ளி கொள்ளும் பொழுதும் தமது மார்பின் மேல் வைத்துக்கொண்டு துயின்றார். அவரது சுவாசத்தினாலும், திருப்பாற் கடலின் அலைகளாலும் அச் சோமாஸ்கந்தமூர்த்தி அசைந்து ஆடினர். அசபையால் நிகழும் அறிதுயில் சுவாசத்தால் அசைந்து ஆடினமைபற்றி அவ் ஆட்டம் ‘அசபா நடனம்’ எனப் பெயர்பெற்றது. தம் தேவியோடும், திருக்குமாரரோடும் திருமாலின் அன்பு காரணமாகத் தமது இடத்தை விட்டு அவரது மார்பிலே வந்து வீற்றிருந்து, அவர்வேண்டிய நலங்களைத் தந்தருளினமையால் அப்பெருமான் ‘தியாகராஜர்’ என்னும்திருப்பெயருடன் விளங்கினர்.

இந்திரன் துவேண்டுகோட்கு இணங்கி ‘வாற்கலி’ என்னும் அசுரனை அழிக்கச்சென்ற திருமால், செல்லும்பொழுது தியாகராஜரை இந்திரனிடம் ஒப்புவித்து வழிபடும்படி கூறிச் சென்றார். அதன்பின்பு அப்பெருமானை இந்திரனே வழிபட்டு வந்தான். தியாகராஜரும் திருப்பாற் கடலையும், திருமாலின் மார்பையும் விடுத்து, இந்திரனிடத்தே எழுந்தருளியிருந்தார்.

அதன்பின்பு இந்திரன் தான் ‘வலன்’ என்னும் அசுரனை அழிக்க நிலவுலகில் வாழ்ந்த ‘முசுகுந்தன்’ என்னும் சோழ மன்னனது உதவியை நாடி, அவனைத் தன் உலகத்திற்கு அழைத்துச்சென்று வெற்றிபெற்றான். அப்பொழுது இந்திரன் தியாகராஜருக்குச் செய்யும் வழிபாட்டில் முசுகுந்தன் அப்பெருமானைத் தரிசித்துப் பேரன்பு பூண்டு துதித்தான். பிறகு இந்திரன் தனக்குச்செய்த உதவிக்காக முசுகுந்தனுக்கு அவன் வேண்டியதைத் தருவதாகச் சொல்லி உபசரிக்க, முசுகுந்தன், இந்திரன் அறியாதவாறு தியாகராஜர் தனக்கு அருளிச்செய்தபடி அப்பெருமானையே தருமாறு வேண்டினன். இந்திரன் அவரைக் கொடுக்க மனம் இல்லாமல், ‘திருமாலின் இசைவின்றி இவரை நான் கொடுத்தற்கு இல்லை; வேறு எதனைக் கேட்பினும் தருகிறேன்’ என்றான். முசுகுந்தன் திருப்பாற் கடலுக்குச் சென்று திருமாலின் இசைவைப் பெற்றுவர, இந்திரன் யாதும் சொல்ல மாட்டாமல் தியாகராஜரைப் போல வேறு ஒரு மூர்த்தியை விசுவ கருமனைக்கொண்டு அமைத்து அவரையே தியாகராஜராகக் காட்டினன். தியாகராஜரது திருவருளால் உண்மை உணர்ந்த முசுகுந்தன், இந்திரன் தர இசைந்த மூர்த்தியை ஏற்க மறுத்தான். இவ்வாறே ஆறு மூர்த்திகளை இந்திரன்

செய்துகாட்ட, அனைவரையும் தியாகராஜர் அருளால் முசுகுந்தன் ஏற்காதொழியவே, இறுதியில் இந்திரன் ஏழு மூர்த்திகளையும் வைத்து, 'இவர்களில் நீ விரும்பும் மூர்த்தியாவர்' என்று கேட்கத் தியாகராஜர் அருளால் முசுகுந்தன் அவரை அறிந்து காட்டினன். அதனல் வெட்கம் உற்ற இந்திரன், 'எல்லா மூர்த்திகளையும் நீயே கொண்டு செல்லுக' எனக் கொடுக்க, அவர்களைப் பெற்றுச்சென்ற முசுகுந்தன் தனக்கு அருள் பாலித்த பிரதான மூர்த்தியைத் திருவாரூரிலே எழுந்தருளப் பண்ணி, மற்ற மூர்த்திகளைத் தனது நாட்டிலே, மற்றைய ஆறு தலங்களில் எழுந்தருள்வித்தான். அத்தலங்கள்,

திருநாகைக் காரோணம்(நாகப்பட்டினம்)திருநள்ளாறு,
திருக்காருயில் திருக்கோளிலி, (திருக்குவளை) திருவாய்மூர்,
திருமறைக்காடு (வேதாரணியம்)

என்பவை. ஆகவே திருவாரூர் முதலிய ஏழு தலங்கள், 'சப்த தியாக ஸ்தலம் அல்லது சப்த விடங்க ஸ்தலம்' எனக் குறிக்கப் பெறுகின்றன. எனினும், முதன்மைத் தியாகராஜ ஸ்தலம் திருவாரூரேயாம்.

அடியவரது அன்பின் பொருட்டுத் தமது மகாகயிலாசத்தை விடுத்துப் பாற்கடலில் வந்து, பின் அதனையும் விடுத்து இந்திரனது மாளிகையை அடைந்து, பின் அதனையும் விடுத்து அமரர் நாடு ஆளாதே ஆரூர் ஆளும் அம்மானகி அமர்ந்து, வேண்டுவார் வேண்டுவதை வழங்கியருளும் தியாகராஜப் பெருமான், வீதி விடங்கராய் எழுந்தருளும் பங்குனித் திருவிழா, தியாகத்திற்கு ஓர் விழாவாக நமக்கெல்லாம், தியாக உணர்வை ஊட்டும் பெருவிழாவாக விளங்குகின்றது, அது பற்றியே பங்குனித் திருவிழா பல தலங்களிலும் நடைபெறுவதாயினும், திருவாரூர்த் திருவிழாவே சிறப்பானதாகச் சொல்லப்படுகின்றது.

இத்தியாகத் திருவிழாவில் அடியார்க்கு அமுதளித்தல் முதலியவைகளைச் சிறப்புறச் செய்தற்காகவே சுந்தரர், திருப்புகலூரில் சென்று இறைவனிடம் பொன் பெற்று வந்து பரவையார்க்கு அளித்தார். இன்னும் குண்டையூர் நெல் மலையைக் கோளிலிப் பெருமான் தனது பூத கணங்களைக் கொண்டு திருவாரூரில் சேர்ப்பிக்க, அவைகளைப் பரவையார் பலரும் கைக்கொள்ளுமாறு தியாகம் பண்ணினர். இத்தகைய தியாகத்தில் ஒரு சிறு கூருவது இன்று மக்களிடம் அமையுமாயின், நாடு பொன்னுடாய் விளங்கும். தன் நலமே பல்கிப் பெருகிவரும் இந்நாளில், அடுத்துவரும் தியாகராஜர் திருவிழாவில் தியாகராஜரைத் தரிசித்தாயினும் அவர் அருளால் மக்கள் தியாக உணர்வை அடைந்து நாட்டிற்கு நலம் புரிவார்களாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை

ஒவ்வொரு மனிதனும் உய்தி பெறுவதற்கு ஆன்மார்த்த பூஜை செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாதது. எல்லாம் வல்ல முழுமுதற் பரம்பொருள் காரிட்ட ஆணவக் கருவறையில் கட்டுண்டு கண்ணிலாக் குழவியைப் போலிருந்த உயிர்களுக்கு, அவற்றின் பக்குவத்திற்கேற்ப உடலையும், கரணங்களையும், உலகத்தையும் இன்பத்துன்பங்கட்கு ஏதுவான பொருள்களை யும் படைத்துக் கொடுக்கிறது. மனிதனால் இவற்றைச்செய்ய இயலாது, மனித முயற்சியால் செய்ய இயலாத இவற்றை உயிர்களின் உய்விற்காகவே படைத்துக்கொடுக்கும் பரம் பொருளைச் செய்ந்நன்றி அறிதலின் அடையாளமாக வழிபடுவதே உயிர்களின் தலையாய கடமை.

## நமக்காகவே வழிபாடு.

மக்கள் இறைவனை வாழ்த்துவதும், வழிபடுவதும் அவர் களின் நலங்கருதியே யல்லாமல் இறைவன் நலங்கருதி அல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். வழிபடுகிற உயிரின் அறிவு தெளிவுற்று மேன்மை அடைகிறது. இதற்கு உதாரணம் கல்வி பயிலும் மாணாக்கன் பள்ளிக்குச் சென்று படிப்பது, அவன் அறிவு தெளிவு பெறுதலாகிய நலங்கருதியே யல்லது பள்ளியின் நலங்கருதியன்று. தன்னைவிடப் பலவகை யிலும் உயர்ந்தாரைச் சார்ந்து வாழ்கின்ற மனிதன் அவ்வாறு வாழ்வது அவர்களுக்குப் பெருமைதேடித் தருவதற்கன்று; இவன் நலம் அடைவதற்காகவேயாகும். பூசனை புரிவது, புரிபவருடைய நலங்கருதியே என்பது ஊன்றி உணர்வார்க்கு நன்கு தெளிவு பெறும்.

## இருவகை வழிபாடு.

பூசை ஆன்மார்த்தம் பரார்த்தம்என இருவகைப்படுகின்றது. ஆன்மார்த்தம் என்பது தன்னுயிர்தானறப் பெறுவதற்கும்,

இவ்வாழ்வில் நலம் பலபெற்று வாழ்வதற்கும் ஆசாரியரிடத்தில் உபதேசம்பெற்றுப் பூஜை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு பூசிப்பதாகும். பரார்த்தம் என்பது ஆலயங்களில் மகரிஷி களாலும் மன்னர்களாலும் முனிவர்களாலும் பிரதிஷ்டை செய்யப் பெற்று, இறைவனை உணர்ந்து பூசிக்கும் தகுதியும் வசதியும் அவகாசமும் இல்லாத உயிர்களின் நலங்கருதி பூசிக்கப் பெறுவதாகும். கோயில்வழிபாட்டின் சிறப்பை அறிந்தவர்கள் இங்கு ஆசாரியர்களை நியமித்து இரண்டுகாலம், நான்கு காலம், ஆறுகாலம் என்ற முறையில் பூசைகளை அமைத்து முறையாக வழிபாடு செய்துவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திருக்கோயில் சென்று தரிசிக்காத மக்களுக்கு அவர்கள் நலங்கருதி இறைவன் பிரமோற்சவத்தில் உலாவந்து காட்சி கொடுத்து அருள் செய்கின்றான்.

## பூஜை என்பதன் பொருள் :

வடமொழியில் பூஜை என்பதே தமிழில் பூசை என வழங்கு கிறது. பூர்யதே ஜாயதே இதி பூஜா என்று வடமொழியில் பொருள் விரிப்பர். பூ, நிறைவு. இது கன்ம பூர்த்தியைக் குறிப்பிடுகிறது. ஜா, உண்டாதல்; இதுஞானத்தோற்றத்தைக் குறிப்பிடுகிறது. எனவே பூஜையால் கர்மம் பூர்த்தியாகி ஞானம் தோன்றுகிறது என்பதாம். ஆதலால் ஒவ்வொருவரும் கர்மத்தைச்செய்யச் செய்ய ஞானம் தோன்றுகிறதேயல்லாமல் கர்மத்தைச் செய்யாதவர்களுக்கு ஞானம் தோன்றுவதே இல்லை. எந்தக் கர்மத்தையும் செய்யச் செய்ய அறிவு வளர்கிறது. அது இறைவனைக் குறித்து அமையும் பொழுது மெய்ஞ்ஞான மாக மிளிர்கிறது. பூசை என்பது பூவைக்கொண்டு செய்வதனால் பூசை எனமருவி வழங்கி வருகிறது என்றும் கூறுவர். அதில் மேற்கூறிய தத்துவப் பொருள் அமையவில்லை. பரார்த்த பூஜை செய்வதற்கு சிவாசாரியர்களே உரியவர்கள். ஆன்மார்த்த பூஜை தகுதி வாய்ந்த யாவரும் செய்ய வாய்ப்பாக உள்ளது.

## திரிகரணம்.

இவ்விருவகைப் பூஜைகளையும் செய்வோர், மனம் வாக்குக் காயம் (உடல்) என்ற திரிகரண (மூன்று கருவி)த்தையும் இறை வனின் உடைமையாகக் கருதிச் செய்தல் வேண்டும். இதனை உலகியலில் திரிகரண சுத்தியோடு செய்தல் என்பர். மனத்தால் நினைத்தலும், வாக்கால் வழுத்தலும் மந்திரங்கள் சொல்லலும் கை முதலிய உறுப்புக்களால் மலர் சூட்டுதலும் செயல் முறைகள் செய்தலும் பூஜையில் முக்கியமானவை. இதனை அருணந்திசிவம்,

"மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றி"

என்ற தொடரால் குறிப்பிடுகிறார். மனம் மெய்யாக வழிபடுவதை உள் மெய் (உண்மை) என்றும், வாக்கு மெய்யாக வழிபடுவதை வாய்மெய் என்றும், உடல் மெய்யாக வழிபடுவதை மெய் மெய் என்றும்பெரியோர்கள் அறிவித்துள்ளனர்.

## பொய் என்றால் என்ன ?

உலகியலில்உண்மை, பொய்மைஎன்ற இரண்டையும்எல்லோரும்பொதுவாக அறிவர். ஆனால் அதன் நுட்பத்தைப் பெரும்பாலோர் அறிவதில்லை. பொய் என்பதை இல்லாதது என்றே கருதுகின்றனர் அது அப்படி அல்ல. நிலைமாறுபாடு உடையது என்பதே பொய் என்ற சொல்லுக்குப் பொருள். உதாரணமாக, ஒருபொருளை இழந்தவன் அப்பொருள் தொலைந்து போய் விட்டது என்றே சொல்கின்றான். உண்மையில் அப்பொருள் தொலையவில்லை. இவனிடமிருந்து வேறு இடத்திற்கு மாறியிருக்கிறது; அல்லது உருமாறி நிலைவேறு பட்டிருக்கிறது. அதுபோலவே பொய் என்பது நிலையில்லாதது. மாறுதல் உடையது என்பதே உண்மையாம்.

## மெய் என்றால் என்ன ?

மெய் என்பது நிலையானது; மாறுதல் இல்லாதது. ஒவ்வொருமனிதனும் அடிக்கடி மாறக்கூடியவற்றை விரும்பாமல் மாறாது என்றும் நிலைத்ததை அடைய முற்படுவதே அறிவுடைமையாகும். இதுபற்றியே, சைவர்கள் நிலைமாறுபடாத திருநீற்றை ஒருநாளில் பல முறையும் அணிந்துவருகின்றனர். அணியும் போதெல்லாம் நிலைத்த இன்பத்தை அருள இறைவனை வேண்டுகின்றனர். அந்த எண்ணம் மிகமிக நிலையிலா இன்பவேட்கை குறைந்து நிலையுடைய பேரின்ப வேட்கை வளர்கின்றது. திருநாவுக்கரசரும், 'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா' என்று நெஞ்சை அழைத்து, நிலைபேறான இன்பத்தைப் பெறவேண்டும் என்று அறிவுறுத்துகிறார் ஆகவே நிலையான நன்மையைப் பெறவே அறிவுடைய எல்லோரும் விரும்புவர்.

## உள், வாய், மெய் :

திரிகரணமாகக் கூறப்பெற்ற மனம் மொழி மெய் என்ற மூன்றனுள் மனத்தை உள்ளம் என்று குறிப்பிடுகிறார்கள். அந்த உள்ளத்தை நிலையிலாச் செயலில் ஈடுபடுத்தாமல் நிலை

யுள்ள செயலில் ஈடுபடுத்தி உண்மைப்பொருளை அடைய வேண்டும்.

> " உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
> உள்ளத்துள் எல்லாம் உளன் "

என்ற திருக்குறளில் உள்ளம் மெய்ம்மையில் நிற்பதாகிய உள்மெய்யின் (உண்மை) உயர்வைக் காண்கின்றோம். வாயினல் மெய்யான பொருளை எடுத்து ஓதுதலே வாய்மெய் எனப்படுகிறது. மெய்யால் (உடலால்) மெய்யான செயலைச் செய்தலே மெய்மெய் எனப்படுகிறது. மெய்யாக - என்றும் நிலைபேருக உள்ள உயிர்கள் அறியாமையால் கட்டுண்டு கிடக்கின்றன. அவை, நிலைபேறுடையதாய், எல்லாம் வல்லதாய், நுட்பமாய் உள்ள பரம்பொருளை நாள்தோறும் உள்மெய், வாய்மெய், மெய்மெய் - ஆகிய மூன்ருலும் நினைத்து வாழ்த்தி, வழிபடின் அப் பரம்பொருளை அடைந்து இன்புறும். உள்மெய் முதலிய மூன்றினலும் இறைவனை அடையவேண்டும் என்பதை,

> பாரார அட்டாங்க பஞ்சாங்க
> விதிமுறையால் பணிந்து, உள்வாய் மெய்
> நேராகச் சூழ்ந்துடலம் கம்பித்துக்
> கும்பிட்டு நிருத்தம் செய்து
> தாராரும் தொடைமிதப்ப ஆனந்தக்
> கண்ணருவி ததும்பநின்று அன்பு
> ஆராமை மீக்கொள்ள அஞ்சலித்துத்
> துதிக்கின்ருன் அமரர் கோமான்.
> (இந்திரன் பழிதீர்த்த படலம்)

என்ற திருவிளையாடற் புராணப் பாடலால் அறியலாகும். இத்தகைய வழிபாட்டைத் திரிகரண சுத்தியோடு செய்து ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளைப்பெற்று உய்வோமாக.

---

## அருமையுள்ளது எது ?
## எளிமையுள்ளது எது ?

அருமையுள்ளது :-
உன்னை நீ அறிந்துகொள்வது.

எளிமையுள்ளது :-
பிறருக்கு அறிவுரை வழங்குவது.

—மிலட்டெஸ் (கிரேக்க அறிஞர்)

# "வேதம் ஊன்றும் பலா"

நீதிபதி, கனம். S. மகராஜன் M. A., B. L.,

நாற்பது ஆண்டுகளுக்கு முன், சென்னை கிறிஸ்தவன் கல்லூரியில், ஒரு தேநீர் விருந்து நடந்தது. ஸ்காட்லண்ட் நாட்டிலிருந்து வந்த பாதிரியார் ஒருவரை வரவேற்று விருந்து நடத்தினர்கள். கல்லூரியின் பழைய மாணவனை ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களையும் விருந்துக்கு அழைத்திருந்தார்கள்.

காட்டுமிராண்டிகளாகிய இந்துக்களை எப்படியாவது திருத்திவிடவேண்டும் என்று கச்சைகட்டிக்கொண்டு வந்தவர் பாதிரியார்; ரசிகமணியை அவரிடத்தே அறிமுகப் படுத்தினர்கள். உடனே ஸ்காட்லண்ட் துரை டி. கே. சி. யைப்பார்த்து, ஏளனத்தோடு, பல கேள்விகளைக் கேட்கலானர். தமிழர்களுடைய பண்பாட்டைப் பற்றியும், சமயத்தை பற்றியும் கேள்விகள் கேட்டார்.

"ஸ்காட்லண்ட் தேசத்திலுள்ள நாங்கள் மரங்களிடத்தில் அதிக அன்பு செலுத்துகிறோம். தமிழர்களாகிய நீங்கள் எப்படியோ?" என்று கேட்டார் பாதிரியார். இந்தக் கேள்விக்கு உடனே டி. கே. சி. பதில் சொன்னர்கள்; 'மரங்களிடத்தில் நாங்கள் அன்பு செலுத்துவதில்லை. பக்தியே செலுத்துகிறோம்' "We do not love we worship them" என்று. அதைக் கேட்ட பாதிரியார் அரண்டேபோனர்.

டி. கே. சி. யின் வாக்கை நினைக்க, நினைக்க அது நம்மை ஒரு சிறந்த சமய உலகத்துக்குள்ளே கொண்டுபோய் விட்டு விடும்.

தமிழ் நாட்டிலே, ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு ஸ்தல விருக்ஷம் என்று ஒன்று உண்டு. திருக்குற்றாலத்துக் கோயிலுக்குள் போனல் அங்கே ஒரு பலாமரத்திற்குப் பூசை நடப்பதைப் பார்க்கலாம். பலாமரத்துக்குள்ளே இறைவன் கொலு வீற்றிருக்கிறான் என்பதை நம் முன்னோர்கள் எப்படியோ கண்டு கொண்டார்கள்.

சென்னையிலிருந்து புதுவைக்குப் பலாப்பழத்தைப் பார்ஸல் செய்து goods வண்டியில் அனுப்பினால், பாதி அழுகிப் போய் விடும். இங்குப் பத்திரமாக வந்துசேருவதெல்லாம் 100-க்கு 25 பழந்தான்.

ஆனால், கோடானுகோடி ஆண்டுகளாகப் பலாமரம் என்ற தத்துவம் பலாப்பழத்தை எவ்வளவு எச்சரிக்கையோடு பாது காத்து வந்திருக்கிறது! வித்தைப் பாதுகாப்பதில்தான் அந்த மரத்துக்கு எவ்வளவு அக்கறை! வித்தை, இனிப்பான மஞ்சள் சுளையிலே பொதிந்து, சுளை கெட்டுப்போகாமல் இருக்கவேண்டுமே, அதற்காகச் சுளைகட்கு வைக்கோல் packing கொடுத்து, பலாக்காயைக் குரங்கு துளைத்துவிடாமல் இருக்க வேண்டுமே, அதற்காக முள் நிறைந்த தோட்டிலே பக்குவமாகச் சுற்றி வைத்து, எவ்வளவு எச்சரிக்கையாக நம் கையிலே கனியைக் கொண்டு வந்து கொடுக்கிறது பலாமரம்!

இதையெல்லாம் கூர்ந்து கவனித்து அதிசயித்தார்கள் நம் முன்னோர்கள். பலாமரம் நம்மைப்போல் B. A., M. A., பட்டம் வாங்கவில்லையே. Botany அதற்குத் தெரியாதே. அது எப்படி இந்த அற்புதங்களைச் செய்யமுடிந்தது என்று சிந்தித்தார்கள்.

அப்பாவி மரமா இந்த வித்தைகளைச் செய்கிறது? இல்லை; மரத்துக்கும் தெரியாத ஓர் தெய்விக சக்தி, மரத்துக்குள்ளிருந்து கொண்டு இந்த அற்புதங்களைச்செய்திருக்கிறது என்று உணர்ந் தார்கள். உணர்ந்த உடனே பலா மரத்தினுள் தொழிற்படும் இறைதத்துவத்தை நினைந்து வணங்கினார்கள். அதற்கு ஆறு கால பூசை நடத்தினார்கள். மேளதாளத்தோடு அதற்கு விழாக் கொண்டாடினார்கள். குறுகிய பலாமரத்தில் வீற்றிருக்கும் இறை வனைக் "குறும்பலாஈசர்" என்று பெயரிட்டு வாழ்த்தினார்கள்.

வேதம் என்ன செய்ததாம்? இறைவனைப்பற்றி சொல்லாலே வருணித்து வருணித்துப் பார்த்ததாம். மனிதனுக்கு அது விளங்கவில்லை. குழப்பந்தான் ஏற்பட்டது. எப்படி மனித னுக்கு இறைவனைப் புரியவைப்பது என்று வேதம் நீண்டகாலம் யோசனைபண்ணி, கடைசியாக ஒரு தந்திரம் செய்தது. ஒரு பலாவின் வித்தைக் குற்றாலத்து மண்ணிலே ஊன்றிவிட்டுப் போய்விட்டதாம் வேதம். அந்த வித்து முளைவிட்டு, இலைபரப்பி, கொப்புங் கவருமாக வளர்ந்து, காய்த்துக் கனிந்ததைப் பார்த் தான் மனிதன். பலாமரத்தினுள்ளிருக்கும் இஞ்சினியரிங் ஜாலங் களையும், ரஸாயன வித்தைகளையும், தாவரமர்மங்களையும் பார்த்த வுடன், இறைவனுடைய திருவிளையாடலைப் புரிந்துகொண்டான்

மனிதன்; வேதத்தைப் படித்தும் பிடிபடாத உண்மை, பலா மரத்தைக் கவனித்ததும் தெளிவாகிவிட்டது. இந்த அரிய கருத்தை,

"வேதம் ஊன்றும் பலாவுள்ள நாடு"

என்று குறவஞ்சி ஆசிரியர் குறிப்பிடுகிறார். மாசற்ற காட்சியுடையவர் அவர், அவருடைய காட்சியிலே பலா மலர் இறைவனுடைய உருவமாகவே தோன்றுகிறது.

"கிளைகளாய்க் கிளைத்தபல கொப்பெலாம்
சதுர்வேதம் கிளைகள் ஈன்ற
களையெலாம் சிவலிங்கம், கனியெலாம்
சிவலிங்கம். கனிகள் ஈன்ற
சுளையெலாம் சிவலிங்கம், வித்தெலாம்
சிவலிங்க சொரூபம் ஆக
விளையுமொரு குறும்பலாவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டுவோமே."

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Thiruvaiyaru.

I have visited this temple to-day along with Padma Shri Rajam Ramaswamy and had Divya Dharshan. I am happy to note that the renovation is almost complete.

(Sd.) N. Krishnaswamy Reddy,

7—2—73. (Sd.) Rajam Ramaswamy.

# கங்கையின் புனிதத்தன்மை

## திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர்

"நதிகளில் நான் கங்கையாவேன்" என்ருர் கிருஷ்ண பரமாத்மா அவர் அருளிய பகவத் கீதையில். வேதகாலத்துக்கு முன்னேயே கங்கை புனிதமானது என்று கருதப்பட்டு வந்திருக்கிறது. அதனில் படிதலும், அதன் நாமத்தைச் சிந்தித்தலும் பாவவினையைப் போக்கிப் பெரும் புண்ணியத்தை அளிக்கும் என்று பல நூல்களும் சிறப்பித்துக் கூறுகின்றன. "பல நூறு காதங்களுக்கு அப்பாலிருந்தாலும் கங்கா தேவியின் புனித நாமத்தை ஒருமுறை உள்ளன்போடு நினைத்தாலே நினைப்பவரது புண்ணிய பாவங்கள் கழுவப்பட்டு ஹரனுடைய திருவடிப் பேறு கிட்டும்" என்று தேவி பாகவதம் கூறுகிறது. இது போன்ற நம்பிக்கையின் கீழ் நம் மக்கள் கங்கையில் அவரவர் வாழ் நாளில் ஒரு முறையேனும் மூழ்குதல் வேண்டும் என்று அவாவுறுவர். அவ்விதம் இயலாது போய் மரண காலம் நெருங்கிவிட்டால் கங்கையின் புனித நீரில் ஒரு சில சிறு துளிகளையாவது அவர் வாயிலிட்டு அவர் மேலே நல்வாழ்வு பெறவேண்டுமென்று எண்ணுவதும் உண்டு.

நம் முன்னோர்கள் இக்கங்கையின் நீர் மிகவும் புனிதமானது; தூய்மையானது; நல்ல பல உலோகச் சத்துக்களும் மருந்துச் சத்துக்களும் நிறைந்துள்ளது. ஆகவே, இதனில் மூழ்கினுலும், இதனை உட்கொண்டாலும் இத்தண்ணீர் நம் உயிரைத்தூய்மை செய்வது போலவே, நமது உடலையும் உள்ளத்தையும் தூய்மை செய்யும் ஆற்றல் வாய்ந்தது என்று கண்டனர். உடல் நோய்கள், சரும நோய்கள் பல இதனுல் அகற்றப்படும் என்பதனையும் கண்டனர். ஆக எல்லாவற்றையும் உள்ளடக்கியே கங்கையில் மூழ்குதல் நல்ல பல பெரும் பயன்களைத் தரும்; ஆயுட் காலத்தில் ஒரு முறையேனும் இதில் மூழ்குதல் வேண்டும் என்று பதிவு செய்து வைத்துள்ளார்கள்.

இதனை மேலை நாட்டினரும் ஒப்புக்கொண்டுள்ளார்கள். அவர்கள் நம்மைப் போல நம் பெரியவர்கள் சொன்னதைக் கொண்டோ, நம் அருள் நூல்கள் சொல்வதைக்கொண்டோ மட்டும் நம்பிவிடுவதில்லை. இத் தண்ணீரில் அருவருக்கத் தக்க சாக்கடைத் தண்ணீரும் பிறவும் கலப்பதால் மேலோட்டமாகப் பார்த்தால் இத்தண்ணீர் தூய்மையில்லாதது; இத்தண்ணீரில் குளித்தும், இத்தண்ணீரைக் குடித்தும், இந்த நாட்டிலுள்ள மக்கள் எப்படி நோயில்லாமல் வாழ்கிருர்கள் என்று எண்ணி வியந்து இதற்கு விஞ்ஞான வழியில் ஆய்வு நடத்தி விளக்கம் கண்டிருக்கிருர்கள் அவர்கள். அவற்றில் சில:

கனடா நாட்டு, மாக் கில் (McGill) சர்வ கலாசாலை விஞ்ஞானப் பேராசிரியர் டாக்டர். F. C. ஹாரிசன் கண்ட முடிவு; அவர் எழுத்திலேயே காணலாம்.

"கங்கைத் தண்ணீரில் கலந்துவிடப்பட்ட காலரா நோய்க் கிருமிகள் அதில் விடப்பட்ட மூன்று அல்லது ஐந்து மணி நேரத்துக்குள்ளாகவே இறந்துவிடுகின்றன என்னும் உண்மை எங்கும் யாரும் காண இயலாத-புரிந்து கொள்ள இயலாத புதிராக உள்ளது. அங்கங்கும் ஊர்ச்சாக்கடைத் தண்ணீரைக் கொண்டுவந்து விட்டும், செத்த பிணங்களைக் கொண்டுவந்து மிதக்கவிட்டும், காலராபோன்றதொத்துநோய்க் கிருமிகள் பெருகும் கழிவுத்தண்ணீரை இதில் வடியவிட்டும், ஆயிரக் கணக்காக உள்ளூர் வாசிகள் உடல் சுத்தம் கருதியும் பிற சுத்தம் கருதியும் இதில் குளித்தும் பிறவற்றைக் கழுவிச் சுத்தம் செய்தும் அழுக்குகளைக் கலக்க விட்டும் இத் தண்ணீர் (கங்கைத் தண்ணீர்) தன் தூய்மை கெடாது எப்போதும் போல மிகத் தூய்மையுடையதாக இருப்பது வியப்புக் குரியது. எதனாலும் இதனைக் கெடுக்க இயலாது என்பதனைக் கண்டேன். நோய் வராது காத்துக் கொள்ள நோய்த்தடுப்பாகவும் இத் தண்ணீரைப் பயன் படுத்தலாம். இந்த முடிவை எல்லோரும் ஏற்றுக் கொண்டே யாகவேண்டும்."

மற்றொருவர் :

உலகப் புகழ்பெற்ற ஃபிரெஞ்ச் விஞ்ஞானி டாக்டர். D. ஹெரெல்லி கண்ட ஆராய்ச்சியின் முடிவு :

"சீதபேதி, காலரா நோய் கண்டு இறந்தோரின் சடலங்கள் கங்கையில் மிதந்திருத்தலைக் கண்டேன். இவ்விதமாக வேறு விதத் தண்ணீரில் மிதந்தால் அச்சடலங்கள் மிதக்கும் தண்ணீர் மட்டத்திலிருந்து கீழே சில அடிகள் வரையிலும் சுற்றிலும்பல அடி தொலைவும் அந்நோய்க் கிருமிகள் பெருகிச் சூழ்ந்துகொண் டிருக்கும். இவை கோடிக்கணக்கில் ஒரு சில மணிநேரத்துக்குள் பெருகிவிடும். ஆகவே அச்சடலம் மிதக்கும் தண்ணீர் உள்ள நீர்நிலை அல்லது ஆறாக இருந்தால் அப் பகுதிகள் எல்லாம் நோய்க்கிருமிகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்து கெட்டுப்போய் விடும். அத்தோடு, நொடிக்கு நொடி அந்நோய்க்கிருமிகள் பெருகி வளர்ந்து உயிரினங்களுக்கு அந்நோயை வேகமாகப் பரவவிட்டுவிடும். ஆனால் இதே நிலையில் கங்கைத் தண்ணீரில் இந் நோய்கிருமி எதுவும், ஏன் ஒன்று கூடக் காணக் கிடைக்கவில்லை. இதனை மேலும் சோதனை செய்து பார்க்க எண்ணி காலரா நோய்க்கிருகனை அந்நோய் கண்ட ஒருவரிட மிருந்து எடுத்து ஒரு கிணற்றுநீரில் சிலவும், கங்கைத்

தண்ணீரில் சிலவுமாக இட்டுச் சோதனை செய்தேன். கிணற்று நீரில் விட்டவை ஒரு சிறிது நேரத்திலேயே ஆயிரக்கணக்காகப் பெருகி வளரத் தொடங்கிவிட்டன. ஆனால் கங்கைத் தண்ணீரில் விட்டவை செத்து மடிந்துவிட்டன அதே நேரத்துக்குள். இது பெரும் வியப்புக்குரியது."

வேறொருவர் :

மிகவும் புகழ்பெற்ற இங்கிலாந்து நாட்டு மருத்துவர் டாக்டர். C. E. நெல்சன் F. R C P., கூறுகிறார் :

"கங்கையின் பிரிவுகளில் ஒன்றாகிய ஹூக்ளியில் வரும் சாக்கடையை ஒத்த தண்ணீரைக் கல்கத்தாவிலிருந்து லண்டன் செல்லும் கப்பல்களில் நிரப்பிக்கொண்டு செல்வது வழக்கம். அது இங்கிலாந்து செல்லும் வரை செலவாக வேண்டிய ஒன்று. இக்கப்பல் கடைசியாகச் சென்றடையவேண்டிய இடம்வரை அக் கப்பலில் உள்ள தண்ணீர் குடிக்கவும் குளிக்கவும் பிறவற்றிற்கும் தூய்மை கெடாது பயன்படக்கூடிய நிலையில் மிக நன்றாகவே இருக்கும். பார்ப்பதற்கு அருவருக்கத்தக்கதாகத் தோன்றினாலும் அது மிகத்தூய்மையுடையதாகவே இருக்கிறது. ஆனால் லண்டனிலிருந்து இந்தியாவுக்கு வரும் கப்பல்களில் அங்கே நிரப்பப்படும் தண்ணீர் இந்தியாவின் முதல் துறைமுகமாகிய பம்பாய் வருவதற்குள் கெட்டுப் போய்விடுகிறது. இதிலிருந்து கல்கத்தா ஒருவார ஓட்டத்தொலைவில் உள்ளது. இந்த அளவுக்குக் (பம்பாய் வந்துசேரும் வரை) கூட அத்தண்ணீர் கெடாது இருப்பதில்லை. வரும் வழியில் சூயெசில் உள்ள போர்ட் செயிட்டிலோ அல்லது செங்கடலில் உள்ள ஏடனிலோ அக்கப்பலில் உள்ள தண்ணீர் முழுவதையும் திறந்து வடிய விட்டுப் புதிதாகத் தண்ணீர் பிடித்துநிரப்பிக்கொள்ள வேண்டியதாகிவிடுகிறது. ஆகவே கங்கையின் தண்ணீர் பார்வையில் எவ்விதமிருப்பினும் மிகத்தூய்மை உடையதாகவே இருக்கிறது."

கங்கைத்தாய் புனிதமானவள்' தூய்மையானவள். தன்னை வந்து அடுத்தோரையும் தன்னில் படிந்தோரையும் தன் பெயர் சொல்லி நின்றோரையும் வாழவைப்பவள் அவள். இதுதான் நம் பழம்பெரும் பாரத மக்கள் கண்ட உண்மை முடிவு: உலகோர் ஒப்பும் முடிவு. ஆகவே அவரவர் ஆயுட்காலத்தில் ஒரு நாளேனும் புநிதமான இக் கங்கையில் மூழ்கி அதன் நீரை உட்கொண்டு உயிர்ச்சுத்தம், உடற் சுத்தம் முதலிய எல்லா நலங்களையும் பெற்றுய்வார்களாக. இந்த ஏக்கம் நம்மவர்களுக்கு உண்டு. இருக்கவேண்டிய ஒன்றுதான்.

வாழ்க நம் பாரதம்! வாழ்க நம் கங்க மாதா;

ஆதாரம் :- Yoga Vedanta 20—9—62.

# ‘ஆடத்தெரியாத கடவுள்’

( ஆசிரியர். எஸ். மகராஜன் - பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு : பக்கம் : 116 - விலை ரூபாய். 2-75. )

சென்னை உயர்நீதிமன்ற நடுவரும்-திருமூலரின் திருமந்திரத்துள் ஆழத்திளைத்தவரும் - சைவ சமயக் கோட்பாடுகளில் பேரீடுபாடுகொண்டு, அவற்றின் நுண்பொருள்களைப் புதிய கோணங்களில் ஆழமாகவும் அழுத்தந் திருத்தமாகவும் எடுத்துரைக்கும் ஆற்றல் மிக்கவரும் - ரசிக மணியின் அன்புக்குரியவருமாகிய, மாண்புமிகு. திரு. எஸ். மகராஜன் அவர்கள் சென்னை, புதுவை, திருச்சி வானொலி நிலையங்களில் அவ்வப்போது பேசிய உரைகளும் பல்வேறு நிலைகளில் எழுதிய சிறு சிறு கட்டுரைகளுமாக 20 தலைப்புக்களில் ஒன்று திரட்டப்பெற்று ‘ஆடத்தெரியாத கடவுள்’ என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பெற்றிருக்கிறது.

நடராசப்பெருமானின் திருக்கூத்தில் மிளிரும் பேரானந்தத் தன்மையை விளக்கத் தொடங்கி, தமிழகத்தில் சக்திவழிபாடு பற்றிய விளக்கம் வரையில் ஆசிரியரின் ஆழ்ந்தகன்ற நுண்ணிதான அறிவு நலமும் - சுவையனுபவமும் அற்புதமாக வெளிப்படுகின்றன. சங்க இலக்கியத்திலிருந்து - பாரதியார் பாடல் வரை ஆசிரியரது நோக்கில் பட்டு மிளிராத இலக்கியங்களே இல்லை எனலாம்.

அன்றாட வாழ்வியலில்நிகழும் நிகழ்ச்சிகளை முன்னிறுத்தி, அவற்றின்மூலம் அரிய உண்மை பொதிந்துள்ள பல்வேறு தெய்விகப் பாடல்களை எளிமைப்படுத்தித்தரும்பாங்கே கட்டுரைகளில் மேலோங்கிக் காணப்படுகின்றன. திருமந்திரப் பாடல்களுக்கு ஆசிரியர் தீட்டும் பட்டைகளில் திருவருள் ஜொலிக்கும் அருமை அற்புதமானது. சமயச் சடங்குகள் பற்றிய ரசிகமணியின் கருத்தைத் தொகுத்துத்தரும் அரிய கட்டுரை கண்மூடித்தனமாகச் சமயச் சடங்குகளைச் சாடிவரும் பலருக்குச் சரியான விளக்கந்தருவதாக அமைந்து நெஞ்சில் நிறைகிறது. தமிழ் நாட்டுச் சக்தி வழிபாடுபற்றிய கட்டுரை அரிய ஆராய்ச்சி விருந்து,

எளிய இனிய பேச்சுத்தமிழில் சிறு சிறு சொற்றொடர்களால் தாராளமாக ஆங்கில - வடமொழிச் சொற்களைக் கலந்து எழுதப்பெற்ற கட்டுரைகள் பலரும் கருத்தறிந்து பயில உதவி செய்யும். திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்கள் குறித்திருப்பதுபோல் ‘நவை மிகுந்த இந்நாளில் சுவை மிகுந்த இந்நூல் பேருவகை தருகிறது’ என்றே கூறலாம். — புலவர். இரா. செல்வக்கணபதி.

# அருள்நந்தி சிவத்தின் அருளுள்ளம்

திரு. ந. ரா. முருகவேள் *M. A., M. O. L.,*

( மலர் 32. இதழ் 1. பக்கம் 126 இன் தொடர்ச்சி)

**சிவஞான சித்தியார் :**

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள், சிவஞான சித்தியார் என்பது ஒன்று. ஆசிரியர் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் என்னும் முதல் நூலுக்கு ஒரு சிறந்த விரிவுரை போலவும், அதன் வழி நூலாகவும் அமைந்த சிறப்புடையது சிவஞானசித்தியார். இந்நூலின் ஆசிரியரே அருள்நந்தி சிவாசாரியர் ஆவர். அவரைப் பற்றி விரிவான விபரமான வரலாறு ஏதும் நமக்குக் கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் அவர்தம் பெருமாட்சிமை இனைத்தென்பது, சிவஞானசித்தியார் என்னும் செந்தமிழ்த் தத்துவ ஞான நூலாற் றெள்ளிதிற் புலனுகின்றது. சிவஞானசித்தியார், பரபக்கம் சுபக்கம் என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. பரபக்கத்தில் உலகாயதம் முதற் பாஞ்சராத்திரம் ஈருக உள்ள பல்வேறு சமயங்களையும், அவ்வச் சமய நோக்கின் வழிநின்று ஆராய்ந்தும், சுபக்கத்தில் சித்தாந்த சைவ நோக்கின்வழி நின்று பிற சமங்களின் ஐயங்களைப் போக்கியும், தமிழகத்தின் தத்துவ ஞானவித்தகக் கருத்துக்களை நம் அருள்நந்தி சிவாசாரியர், முத்தமிழ்த் துறையின்முறை போகிய உத்தமக் கவிஞர் எனத்தகும் நிலையில், செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொற் கவிதைகளால், அழகொழுக விளக்கி யருளியிருக்கின்ருர். தமிழ்மொழிக்கண் உள்ள மிக மேலான சிறந்த உயர்தர நூல்களின் வரிசையில் முன்னணியில் ஒன்ருக விளங்கித் திகழ்வது, சிவஞான சித்தியார் என்பதில் ஐயமில்லை. அந்நூலின் சிறப்பிற்கும், ஆசிரியரின் அருளுள்ளத்திற்கும் சான்ருக, ஈண்டைக்கு ஒன்றை மட்டும் இயன்ற அளவு கண்டு அமைவோம்.

**உலகாயதன் :**

சிவஞானசித்தியாரின் தொடக்கத்தில், பரபக்கப் பகுதியில், உலகாயதன் தன்னுடைய மதக் கொள்கைகளைப் பின்வருமாறு

கூறுகின்றான் : " அளவையாவது காட்சி ஒன்றே; அனுமானம் முதலியன வேண்டுவதில்லை; நிலம், நீர், தீ, காற்று எனப் பூதங்கள் நான்கே. வன்மை, தண்மை, வெம்மை, அசைவு என்பன இப்பூதங்களின் இயல்புகள். மணம், சுவை, உருவம், ஊறு என்பன இவற்றிற்குரிய குணங்கள். மண்ணிலிருந்து குடம் அமைவது போல, இவற்றிலிருந்து உருவங்கள் பல தோன்றும். புத்தி, குணம், பொறி, புலன்கள் முதலியன, நீரில் எழும் குமிழி போல, இவற்றிலிருந்து தோன்றி அழியும். இவற்றின் வேறாக, வினை, உயிர், கடவுள் என்பன இல்லை.

" இவ்வுலகில் மேலான இன்பம், பெண்ணின்பமேயாகும். இம்மையில் இவ்வின்பத்தை நுகரமாட்டாமல், மறுமையில் இன்பம் பெறலாம் என்று முயல்வது, மூடர்களின் செயலேயாகும் அவ்வறிவிலிகளின் செயல், தாகமுற்றவர்கள் தண்ணீர் கிடைக்குமிடத்தில் அதனைப் பருக மறுத்துவிட்டு, அது கிடைக்காத இடத்தில் அதற்காக ஏங்கி வருந்துகின்றவர்களின் செயலையே ஒக்கும்- உண்மையான தவம் என்பது, ஊடுவதும் உணர்வதும் காதலியரை நினைந்து வாடுவதும், அவர்களின் அடியில் விழுந்து அன்பைப் பெற வருந்துவதுமேயாகும். தம்மை மறந்து வேட்கை மீதூர்ந்து மகளிர்பால் எய்துகின்ற இன்பமே முத்தியாகும். இத்தகைய இன்பத்தில் ஆழ்ந்து திளைப்பவர்களே முத்திபெற்றவர்கள் ஆவர் " என உலகாயதன் கூறுகின்றான். இக்கருத்துக்களை ஓர் உலகாயதன் எத்தகைய நிலையில், அழுத்தம் திருத்தமாக வற்புறுத்தி, உணர்ச்சி பெருகக் கூறுவானோ, அதே நிலையில் அக்கருத்துக்களை அழகிய இனிய கவிதைகளாக, அருள் நந்தி சிவம் மிகச் சிறப்பாகத் தொகுத்துக் கூறியிருக்கின்றார்.

**உலகாயத மதமறுதலை :**

இங்ஙனம் உலகாயதனின் மதக்கொள்கைகளைத் தொகுத்துக் கூறியிருக்கின்ற அவரே, அவன்பால் அருள் உள்ளம் கொண்டு அவனைத் திருத்தி அறிவுறுத்தி ஆட்கொள்ளும் முறையில், ' உலகாயதன் மதமறுதலை ' என்னும் பகுதியில் அவனது கொள்கைகளை மறுத்துப் பின்வருமாறு சில அறிவுரைகள் கூறுகின்றார்.

(1) " உலகாயதனே ! பெண்ணின்பமே பேரின்பமென்று பெரிதும் வியந்து புகழ்ந்து கூறினாய். அருவருப்பிற்குரியதோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுக்கிலம் என்னும்

எழுவகைப் பொருள்களால் அமைந்ததே, ஒரு பெண்ணின் உடல். அஃது ஒரு சிறு குடிசை போன்றது; புலால் நாற்றம் வீசுவது; அழுக்கு நிறைந்தது; புழுக்கள் நெளிவது; நூல் போலக் கோழை நீர் ஒழுகுவது; ஈரல் நுரைக்கின்ற மூத்திர பாத்திரமாக விளங்குவது; வெறும் போலிப் புறத்தோற்றம் மட்டுமே கண்டு மயங்கற்க; திண்ணமாக இது மலத்திரள் என்பதனை உணர்ந்து தெளிக ".

(2) "பன்றியானது, அருவருக்கத்தகுந்த அழுக்கும் புழுக்களும் நிறைந்த மலத்தை அளைந்து தின்று இன்பமென்று நுகர்ந்து மகிழும். அதுபோலவே பெரிதும் இழிந்த ஒன்றைப் பேரின்பம் என்று மயங்கி நிற்கின்றாய். குற்றமற்று விளங்குவதும், என்றும் அழிவில்லாததும், மிகத் தூய்மையானதும், மேன்மேலும் பெருகி வளர்ந்தோங்குவதும் ஆகிய சிறந்த பேரின்பம் ஒன்றுள்ளது. அஃது இறைவனுக்கு அடிமை செய்து, அவனருளால் நாம் பெறுகின்ற இன்பமேயாகும் ".

(3) "பிறர்மீது பகையுணர்ச்சியாகிய குரோதமே, தமது குணமாகக் கொண்டிருப்பவர்கள், மன அமைதியாகிய சாந்தி நன்மையை அறியமாட்டார்கள். எதன் மாட்டும் ஆராத பேராசையை உடையவர்கள், ஆசைகளை ஒழிப்பதனால் உண்டாகும் இன்பத்தை உணரமாட்டார்கள். யாவராலும் துதிக்கப்படுகின்ற தேவர்களும் போற்றி வணங்குகின்ற மாபெரும் தலைவனாகிய இறைவனுடைய திருவடியை நீ பற்றிக் கொள்; அதனால் உண்மையிலேயே மிக மேலான சிறந்த இன்பம் நினக்கு மேன்மேல் பெருக உண்டாகும். இது சத்தியம்''.

(4) "காமம் முதலிய இழிந்த குணங்களை, நீ உனக்குச் சுகந்தரும் என்று மயங்கி எண்ணிக் கொண்டிருக்கின்றாய். குளிர் மிகுந்துள்ளபொழுது, வெப்பம் மிக்க நெருப்பு சுகம் தரும். கடுமையான வெப்பம் மிகுந்துள்ளபொழுது, நல்ல குளிர்ச்சி இன்பம் தருவதாக இருக்கும். வெம்மையும் தண்மையும் தாமே இன்பம் தருவன அல்ல; அவைகள் இன்பம் தருவனவாகத் தோன்றுவது சார்பினாலேயேயாகும். தெய்வத் திருவருளாகிய நன்னெறியைச் சேர்ந்து ஒழுகுவதனால்தான், நமக்கு உண்மையிலேயே நலம் தருகின்ற அழியாத பேரின்பம் ஏற்படும் ".

(5) "உலகாயதனே! நீ நல்ல இறையருள் நூல்களைப் படி; பயனற்ற இழிந்த போலி நூல்களைப் படியாதே; வீண் பேச்சுக்களைப் பேசாமல் இறை உயிர் உலகு என்னும் பதி பசு பாசங்களைப் பற்றிய நல்ல பயனுடைய சொற்களையே பேசுக.

அழிந்து போகின்ற இழிந்த மனிதர்களைப் போற்றிப் புகழ்ந்து வணங்கிக் காலம் கழிக்காமல், அழிவற்ற அருள்நிறைந்த இறைவனின் திருவடிகளையே புகழ்ந்து போற்றி உய்க. காமம் வெகுளி மயக்கம் முதலிய குற்றங்களைக் கடிந்து அகற்றுக. இறைவனுடைய திருவருட் பேருகிய செல்வத்தையே அடைய முயற்சி செய்க. ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலத் தொடர்பை நீக்கிக்கொண்டு, இறையருளால் நின்மலத்துவம் எய்துக. அதனுல் நினக்குப் பிறப்பிறப்புத் துன்பங்களற்ற பேரின்பமாகிய முத்தி எளிதிற் கிடைக்கும்''

முடிவுரை :

இங்ஙனம் பல சிறந்த கருத்துக்களை உலகாயதன் மத மறுதலைப் பகுதியில், அருள் நந்திசிவம் அறிவுறுத்துகின்ருர். இப்பகுதியில்,

"குரோதமே குணமாய் இருந்தவர்
சாந்தி நன்மை குறிக்கொளார்;
அராகமே அணைவார்கள் ஆசை
அறுத்த இன்பம் அறிந்திடார்;
பராவு தேவர் பராவு தூய
பராபரன் அடி பற்றி நீ,
விராவி மெய்யில் விடாத இன்பம்
விளைந்திடும்! இது மெய்ம்மையே!" (1)

"படிக்கும் நூல்கள் சிவாகமம்; பசு
பாசமோடு பதித்திறம்
எடுத்து இயம்புவது; ஈசன் வார்கழல்
ஏத்திடும் தொழில்; என்றுமே
விடுத்திடும் பொருள் காமம் ஆதிகள்;
வேண்டிடும் பொருள் ஈண்டுஅருள்;
முடித்து மும்மலம் விட்டு, நின்மல
னேடு நின்றிடல் முத்தியே" (2)

எனவரும் இரு சிறந்த பாடல்களும், ஏதோ பொதுவாக நூற் போக்கில் அமைந்த செய்யுள்களாக இல்லாமல், அருள்நந்தி சிவம் தாமே நம்முன் நேரில் [வந்து நின்று வழங்கியருளும் அறிவுரை அருளுரைகள்போல விளங்குகின்றன.

"சேமம் ஆகிய இன்பமாம், மிகு
தெய்வ நன்னெறி சேரவே" (1)

" மாச தற்றெளிர் நித்த சுத்த
வள ந்தரும் சுக வாரிகாண்;
ஈச னுக்கு அடிமைத் திறத்தின்
இசைந்து நாம்பெறும் இன்பமே " (2)

எனவரும் வரிகள், எத்துணைச் சிறந்த பொருள் பொதிந்துள்ளன என்பது, எண்ணி எண்ணி மகிழ்தற்கு உரியது. " படிக்கும் நூல்கள் சிவாகமம்; எடுத்தியம்புவது பசு பாசமோடு பதித்திறம்; ஏத்திடும் தொழில், ஈசன் வார்கழல்: என்றுமே விடுத்திடும் பொருள், காமம் ஆதிகள்; வேண்டிடும் பொருள், ஈண்டு அருள்; முடித்து மும்மலம் விட்டு, நின்மலனோடு நின்றிடல் முத்தியே " என்று உலகாயதனுக்குக் கூறப்பெறும் அறிவுரையால், அருள்நந்திசிவத்தின் அருளுள்ளம் புலனாதல் காணலாம்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswamy Devasthanam, Sirkali.

"It is nothing but divine grace that I have been able to visit this holy shrine, an event, I was looking forward eagerly, particularly after reading Sivapuranam. How divine mother gave the milk of knowledge to Gnanasambandar. The entire temple precincts have been kept spotlessly clean. The temple Superintendent Shri Sourirajan takes immense interest and enthusiasm in keeping the temple so well. His dedicated service makes this worthy of visit several times. We wish and pray that other places of worship are kept like this."

(Sd.) P. R. Krishnan,

Dy. Collector, Central Excise and Gold,
Madras.

18—1—73.

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

( மலர் 32. இதழ் 3. பக்கம் 141 இன் தொடர்ச்சி )

58 முதிருந்தனி மதுரந்திரு மொழிமாதுமை யொருபால்
வதியுந்திரு வுருவோடுத வளமால்விடை மீதென்
றதிகண்டெதிர் வந்தாண்டனை தகையைந்நதி யாவின்
நதியுங்குளிர் மதியும்புனை நம்பாவுன தருளே. 58

சொ - ள் விண் நதியும் குளிர் மதியும் புனை நம்பா - ஆகாய கங்கையாற்றினையும், குளிர்ந்த தன்மையினையுடைய பிறைச் சந்திரனையும் சடா மகுடத்தில்தரித்துள்ள பெருமானே; தகை ஐ(ந்து) நதியா - பல்வகை வளமுற்றமையால் அழகிய திருவையாறு எனும் பெரும்பதியில் எழுந்தருளியிருப்பவரே, உனது அருளே முதிரும் - தேவரீருடைய திருவருளே நிறையும், தனி மதுரம் தருமொழி மாது உமைவதியும் திரு உருவு ஓடுதவளம் மால் விடைமீது - ஒப்பற்ற இனிமையினைத் தரும் செஞ்சொற்களையுடைய உமையம்மையார் இடது பாகத்தில் எழுந்தருளியும் அழகிய வடிவத்துடன் (வெண்மையாகிய) தவளமாகிய திருமால் என்னும் ஏற்றூர்தியின் மேல் எழுந்தருளி, என்றதிகண்டு - ஏழையேனுடைய பருவகாலமறிந்து, எதிர்வந்து ஆண்டனை - நேரே வந்தருளி ஆண்டு கொண்டனை.

(கு - ரை) விண்நதி - ஆகாயகங்கை; இதற்கு 'சுரநதி' யெனவும் பெயர் உண்டு. றதி - பருவம் (சமயம்). 'மதுரவாய் மொழி மங்கையொர் பங்கினன் எனும் தேவார அடியினையே யொற்றி 'மதுரந் தருமொழி மாதுமை' யென்றார். உமா மகேசுவரன் வெள்ளிவிடைமேல் இவர்ந்தருள் காட்சியிவ்வூர்க்குத் தனிச்சிறப்பாதல் பற்றி "தவளமால் விடைமீது வந்தாண்டனை" என்றார். தவளம் - வெண்மை. இது திருமால் - விடையான தன்மை. அறம் வெளுப்பு ஆகலின் தவளமால் விடையெனலுமாம். பேசப்பெரிதும் இனியன் ஆகலின் நம்பா என விளித்தனர். தகை - அழகு. ஏகாரம் தேற்றப்பொருளது.

59 நம்பாவுனை நம்பாது தினம்பாசக ருடனே
வம்பார்குழல் வம்பார்முலை வம்பார்மொழி மடவார்
தம்பாலில் யாதுன்னருள் தந்தேயெனைக் காவாய்
அம்போருக மிகுதண்பணை யையாற்றிறை யவனே.

சொ - ள் நம்பா - விருப்பத்திற்கு இசைந்தவரே, அம்போருகம் மிகு தண்பனை ஐயாற்று இறைவனே - தாமரை மலர்கள் மிகுந்த குளிர்ந்த மருத நிலங்கள் சூழ்ந்திருக்கும் வளமிக்க திருவையாற்றில் எழுந்தருளிய பரம பொருளானவரே, உ(ன்)னை நம்பாது - தேவரீரையே நம்பியிருக்காது, தினம் - நாள்தோறும், பாசகர் உடன் ஏ - பாவிகளுடன் கூடிக்கொண்டு, வம்பு ஆர் குழல் வம்பு ஆர் முலை வம்பு ஆர் மொழி மடவார் தம்பால் அலையாது - நறுமணம் நிறைந்த கரிய கூந்தலினையும் கச்சால் (இரவிக்கையால்) இறுகக் கட்டின கொங்கைகளையும் புதுமை பொருந்திய இன்சொற்களையும் உடைய இளமையான மகளிரிடத்துக் காமமயக்கினால் சென்று அலைந்து வாடாதபடி. உன் அருள் தந்தே, என்னை காவாய் - தேவரீருடைய திருவருளைத் தந்து அடியவனைக் காப்பாற்றியருள்வாயாக.

(கு - ரை) அம்போருகம் - தாமரை, வம்பு - புதுமை, மணம், கச்சு. பாசகர் - வஞ்சகர் (கபட முடையவர்) தண்பணை - மருதநிலம். நம்பு - விருப்பம். " நம்பும் மேவும் நசையாகும்மே" என்பது இயல். " நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்" என்பது கம்பர் வாக்கு. இரண்டாமடி முற்றுமோனை. மடவார்-இளமங்கையர். அலைதல்- ஒருபாற் படாதிருத்தல், காத்தல்- எந்த இன்னலும் வராதபடி பாதுகாவல் புரிவது. அரன் - எல்லா நலன்களையும் அருளுபவன்; பாவங்களைப் பறையுமாச் செய்பவன்; தற்பவமொழி. சிவநாமங்களுட் சீரிய நாமம் ஆகுமிது. ஏகாரம் - வினை.

60 வனசங்கரி சறுமில்லென வதியும்விதி யொடடுபா
வனசங்கரி மகவான்முனி வரருந்துதி புரிமா
வனசங்கரி மருவைந்நதி வள்ளாலென்றன் வினையா
வனசங்கரி தருடந்தெனை வாழ்வித்தனின் கடனே.

சொ - ள் வனசம்கரிசு அறும்இல் என வதியும் விதியொடு- தாமரை மலரினையே குற்றமற்ற இருக்கையாக இருக்கும் பிரமதேவனுடன், பாவனம் - தூயதுழாய் மாலையினை யணிந்த, சங்கு அரி - சங்கினையுடைய திருமாலும், மகவான் - இந்திரனும்'

முனிவரரும் - அகத்தியர் முதலிய முனிசிரேட்டரும், துதிபுரியும் - தோத்திரம் புரிகின்ற மாவ(ன்)னம் சங்கரிமருவு ஐந்நதி வள்ளால் - கரியநிறமுடைய உமாதேவியுடன் எழுந்தருளியுள்ள திருவையாற்றிறைவரே (வள்ளற்பெருமகனே), என்தன் வினை யாவன சங்கரித்து - ஏழையேனுடைய பழவினைகள் அனைத்தை யும் போக்கி, அருள்தந்து - திருவருள் கொடுத்து, என்னை வாழ் வித்தல் - முத்தியிடை செலுத்தி வாழவைத்தருளல், நின்கடன் ஏ - தேவரீருடைய கடப்பாடாகும் (எ-று).

(கு-ரை) வனம் - நீர். சம் - தோன்றுவது. வனசம்-நீரிற் றோன்றுவது. காரண விடுகுறிப்பெயர். கரிசு-குற்றம். வதிதல் - இருக்கையாகக் கொண்டு இருப்பது பாவனம் - தூய்மை, பரந்த மணமுடைய திருத்துழாய். மகவான் - நூறு யாகங்களைச் செய்து இந்திரபதவி யெய்துதலின் இந்திரனுக்கு ஒரு பெய ராயிற்று. முனிவரர் - முனிவர்களின் மேம்பட்டவர் (இருடி சிரேட்டர்). மா - கருமை, பெருமையுமாம். வன்னம் - இடைக் குறையாய் வனம் என வந்தது. மருவல் - இடப்பாகத்தமர்ந் தருளல். வள்ளல் - வரையாது வழங்குபவர். சங்கரித்தல் - இல்லாது ஒழிப்பது. கடன் - கடப்பாடு, வாழ்வித்தல் - அந்த மில் இன்பத் தழிவில் வீட்டினை யடையுமாச் செய்தலே வாழ்வித்த லாம். கடனே - என்பதில் ஏகாரம் தேற்றம். அசை நிலையு மாம். 'வனசங்கரி' என்பது ஒரெதுகைத்தொடை (யமகம்ஆம்)

(அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

61 கடமதம் பொழியும் நால்வாய்க் கரியுரித் தவனே [செம்பொன்
தடநெடுங்கிரியைக்கோட்டுத் தாணுவே! யறுகால்தும்பி
அடர்தொடைச் சடில வையாற்(று) ஐம்முகத் [தெய்வமே! யென்
தொடர்வினைப் பவங்கள் தீர்ப்பாய் தொண்டனேன் [உய்யு மாறே

சொ - ள் : கடம் மதம் பொழியும் நால்வாய் கரி உரித்தவன் ஏ - மிக்க மதத்தைப் பொழியும் தொங்கியசையும் வாயினை யுடைய யானையினை உரித்து அதன் தோலினைப் போர்த்தியருளி யவனே! செம்பொன் தட(ம்) நெடும் கிரியை கோட்டும் தாணு ஏ - செம்பொன் மேருவாகிய பெரிய நெடிய மலையினை வில்லாக வளைத்தருளிய பரம்பொருளே! அறுகால் தும்பி அடர் தொடை சடில - ஆறு கால்களையுடைய வண்டுகளானவை நெருங்கி மொய்த்துள்ள மலர்மாலையினைத் தரித்த கபர்த்தமெனப் பெயரிய செஞ்சடை வானவரே! ஐயாற்று ஐம்முகத்தெய்வமே -

திருவையாற்றில் எழுந்தருளிய ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் எனப் பெயரிய ஐம்முகங்களையுடைய பரம் பொருளாகியுள்ளவரே, தொண்டன் உய்யுமாறு - அடியனேன் கடைத்தேறுமாறு, என் தொடர்வினை பவங்கள் தீர்ப்பாய் - என்னுடைய முன்னை வினைகள் காரணம் ஆகப் பற்றித் தொடர்கின்ற பிறவிப் பெரும்பிணிகளை அறவே களைவீராக. (எ-று).

(கு - ரை) தடநெடுங்கிரி - மகாமேருமலை. (வடமலையாம்). பொழியும் - சொரியும். நால்வாய் - தொங்குகின்ற வாய். நாலுதல் - நீளுதல் (நீளல்). கரி - கருமையுடையது; கரத்தையுடையதுமாம். கோட்டுதல் - வளைத்தல். தாணு - பற்றுக்கோடு, சுயம்புமூர்த்தி. அறுகால் தும்பி - வண்டு. அடர்தல் - நெருங்கல். தொடை - தொடுக்கப்படுவது; (மாலை). சடிலம் - சடை. ஐம் முகம் - ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம் ஆயவைகளாம். இந்நிலையோடு நேபாளத்தில் இலங்குகின்றார் என்பர். "ஐந்து முகத்தோடு அதோ முகமுந்தந்து" எனல் கொண்டு ஆறுமுகமாக்கி யுரைப்பதும் ஒன்று. தொடர்வினை, வினைத்தொகை. முன்னைப் பிறவிகளில் செய்தன பின்னைப் பிறவிகளில் வந்து பற்றுவது.

"பல்லாவுள் உய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாம் தாய் நாடிக் கோடலை — தொல்லைப்
பழவினையும் அன்னதகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு"

என்பது நாலடியார். (தொடரும்)

---

## " கற்பிற்கு இழுக்கு "

பெண்களின் கற்பிற்குத் தீங்கு விளைப்பன இவை என்ற கருத்து சிந்தனைக்குச் சுவையூட்டுகின்றது. ஆழ்ந்து நோக்கினால் இக்காரணங்களின் உண்மையும் வன்மையும் நன்கு விளங்கும்.

1. கணவனின் நீங்கி வாழ்தல்
2. அடிக்கடி அயலார் வீடுகளைத் தானே தேடிப்போதல்
3. நெறியில் நீங்கிய தீய மகளிரைச் சேர்ந்து பழகுதல்
4. அணிகலன் அணிந்துகொண்டு அயலூர்க்குத்தனித்துப் [போதல்
5. தனியே சென்று திருவிழாக் காணுதல்
6. கணவன் கட்டளையின்றி நோன்புகள் மேற்கொள்ளல்.

— அறநெறிச்சாரம்.

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 32. இதழ் 2. பக்கம் 130 இன் தொடர்ச்சி )

## 58. வாதவூரடிகளுக்கு உபதேசித்தது.

கலைவிசு மதிச்சடையோன் வலைவீசிய வண்ணங் கண்டோம். இனி அவன் வாதவூரரைப் பணிகொண்டவாறு காண்போம்,

வறுமையொழிந்து பயன்பெருக வேண்டுமென்று குளம் வயல்களை நிறைத்த வைகை, ஒருவருக்கும் உதவாத உப்புக் கடல் என்று அதனோடு கலக்காமல் ஓடும். அதன் கரையில் உள்ளது வாதவூர். அவ்வூரில் விழவும் விருந்தும் ஓயாது. மகிழ்வும் முழக்கமும் நீங்காது. சோலையில் முகிலும் வீதியில் வேதமும் முழக்கம் செய்யும். இந்த நம்பதியில் ஆபாத்தியர் குடியில் தூயசிவாகமத்துறை விளங்க புத்தசமயமென்னும் இருள் உடைந்தோட - இளம்பரிதியென சிவனருளால் திருவாதவூரர் அவதரித்தார். பதினாறாண்டிற்குள் சகல கலைகளையும் படித் துணர்ந்து அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சுத் தலைமை பூண்டு விளங்கினார். கண்ணும், இடுகவசமும்போல் காரியங் களைச் செய்யும் அமைச்சர் உதவியால் வழுதியின் ஆட்சி மேன்மையுற்றது.

### வாதவூரரின் சிந்தையும் செயலும் :

வாதவூரரின் சிந்தையெல்லாம் இம்மை மறுமைப் பயன் களில் தோயாது சிவனைத் தேறும் செம்மையறிவாகவே இருந்தது. பல வேதாகம, சைவ சித்தாந்திகளை நெருங்கி சமயவுண்மைகளைக் கேட்டறிந்தும் அவ்வறிவெல்லாம் உண்ணு நீர் வேட்டு உவரிநீர் உண்டதுபோல் இவருக்கு அமையாதன வாய் இருந்தது. மனத்தை இறைவரிடம் கொடுத்து அமைச்சுத் தொழில் நடத்திய இவர் கள்ளக் காதலனிடம் அன்பு கொண்ட பெண் போல இருந்தார் என்கிறார் பரஞ்சோதியார்.

வாய்ப்பொன்று வந்தது.

ஒருநாள் அரசவையில் குதிரை காப்பவன் வேந்தனிடம் 'நம் குதிரைகள் மூப்பாலும் நோயாலும் இறந்தன போக, சிறந்தன என்பதற்குச் சிலவும் இல்லை'—என்று தெரிவித்தான். வழுதி உடனே வாதவூரரைப் பார்த்து 'நீர் நமது நிதியறையைத் திறந்து, வேண்டும் பொருள் கொண்டு சென்று குதிரைகளை வாங்கிவாரும்'—என்று உத்திரவிட்டான். வாதவூரரும் அதற்கிசைந்து பொற்சுமையோடு முதலில் ஆலவாய்க் கோயிலுக்குள் நுழைந்தார். பொற்றாமரையில் மூழ்கி, புனிதனின் திருவடி வணங்கி, கருணை நாயகியாம் அங்கயற்கண் அம்மையின் அடியிணை தொழுது 'பெருமானே - இப்பொருளெல்லாம் உனக்கும் உன்னடியார்க்கும் ஆகுமாறு அருள் புரிக'—என்று தன் விருப்பத்தை வெளிப்படுத்தினர். அந்நேரம் இறைவன் திருவருள் உண்டு என்பதைக் காட்டுவது போல் அர்ச்சகர் ஒருவர் வந்து திருநீறளித்தார். அதையே நன்னிமித்தமாகக் கொண்டு விடை பெற்றுப் புறப்பட்டார் அமைச்சர் பெருந்தகை.

திருப்பெருந்துறை அடைதல் :

நிறைந்த ஆரவாரத்தோடு மதுரை விட்டு வாதவூரர் புறப்படுமுன் ஆலமர் செல்வனாக ஆலவாய் இறைவன் பெருந்துறையில் வந்தமர்ந்து அடியவரை எதிர்பார்த்துக் காத்திருந்தார். வாதவூரர் மனம் இங்கே வர வர நெருப்பிடு வெண்ணெய் போலுருகத் தொடங்கிற்று. மற்றவர்கள் பித்தனென்றுகூட நகைக்கலாமளவு மெய்பதைபதைப்போடு விரைந்து வந்தார். கோயிலையுங் திருக்குளத்தையுங் கண்டார். புனலில் மூழ்கித் தூய்மையாகிக் கோயிலுள் சென்று பரமனைப் பரவி மகிழ்ந்தார். வேதங்கள் ஒருமருங்கும், மெய்ச்சைவ போத நூலொரு புறமும், புராணத்துட் கிடந்த கீதநூல் ஒருபக்கமுமாக வல்லவர்கள் அங்கே பாடி உரைவிரித்துக் கொண்டிருந்தார்கள். சரியை வல்லோர், கிரியை வழிநின்றோர் - சிவயோகந் தெரியுமோர் அளவிலராய் அங்குப் பொலிந்தனர்.

கருத்தால் சிவனின் திருவடிகண்டு செம்மாப்பவர்கள் உலகக் காட்சிகளில் மனந்தோய்வில்லாமல் கண்ணொளியிருந்தும் குருடர்களாய் அங்கே திரிந்து கொண்டிருந்தார்கள். இப்படித் தொண்டர் குழாம் சூழ கல்லால மரத்தடியில் கையில் சிவஞான போதநூல் விளங்க வீற்றிருந்த கருணையை வாதவூரர் பார்த்தார். மன்றுளாடிய ஆனந்த வடிவமும்; வடவால மரத்தடியில் ஒன்றியிருந்த திருவடிவமும் இன்று அடியேன் பொருட்டு வெளிப்பட்டு நின்றது என்று அகமகிழ்ந்தார்.

வாதவூரரின் அன்பென்ற வலையுள் அண்ணலும் அகப்பட்டார். தண்ணருள் நயனங்களால் அவர் மலமகற்றி, பாதகமலங்களை அவர் சிரசில் சூட்டி, தன்வண்ணமலர்க்கையைத் தலையில் வைத்துத் தீக்கையுஞ்செய்தார். ஞானவாணி வாதவூரடிகளின் நாவில் குடிகொள்ளத் தேனும், பாலும், கன்னலும், அமுதமுமாய், ஊனும் உள்ளுமுருக மடைதிறந்த புனல்போலப்பாக்கள் வெளிவந்தன. அழல்வாயுறு நெய்போல உருகிப் பாடிய வாதவூரர் பழுதிலாத சொல்வகையென்ற மணிகளை அன்பென்ற வடத்துள் பிணித்து அலங்கலாக்கிப் பெருமானுக்கு அணிவித்தார். அதுகண்டு இறைவன் அவருக்கு 'மாணிக்கவாசகன், என்ற பெயரைக் கொடுத்தார்.

மாணிக்கவாசகர் எல்லை நீத்து எங்கும் பரந்த இறைவனின் பாதங்களில் கண்ணீர் சொரிந்து சொல்மலரால் அவரைப் பூசித்து, தற்போதமென்ற இன்னமுதை நிவேதித்து, ஞானமென்ற எரியோம்பி சிவபூசையை மகிழ்ந்துசெய்தார். இறைவன் இவரை இன்னும் பணிகொள்ளும் பொருட்டும், தித்திக்கும் இவர் வார்த்தையைக் கேட்பதற்கும், பாண்டியனுக்கு இவர் பண்பைத் தெரிவிப்பதற்கும், புத்தர்களின் வாதத்தை ஒழிப்பதற்கும் இவரை இங்கேயே 'இரு' என்று கூறித் தன்னுருக் கரந்து சென்றான்.

## நானேயோ தவம் செய்தேன் :

கனவில் கண்ட காட்சிபோல் எல்லாம் மறைய மணிவாசகர் தடுமாறித் தவித்தார், நாய்க்குத் தவிசிட்டதுபோல் என்முன் திருமேனி தாங்கிவந்து அருள்கொடுத்து, உன்னடியாரோடு என்னையும் இட்டுச் செல்லாமல் சென்றது ஏன்! இனிநான் என்னசெய்வேன்? வாள்கொண்டு இவ்வுடலை மாய்க்க, தீவாய் மடுக்க, வரையுருண்டு சாவ வழியும் இல்லை. காரணம் நின்னுடைமையான இவ்வுடலை என் கருத்துப்படி எதுவும் செய்ய இயலாது. பிறவிக்குருடன் கையில் கிடைத்த மாணிக்கம்போல், மழவுமுதிர் குழவிகையில் கிடைத்த பொற்கிண்ணம்போல் என்னிடம் வந்தாய். வந்து ஆனந்தம் தந்து மறைந்தது நீதியா? என்று பலவாறு புலம்பினர். பின்பு கோயிலைவிட்டு வெளியில் வந்து தன்னை எதிர்பார்த்துள்ள அரசுப் பணியாளர்களிடம் ஆடிமாதத்தில் கடற்றுறைக்குக் குதிரைகள்வரும், வாங்கிவருவேனென்று வேந்தனிடம் கூறுங்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தார். அதன்பிறகு பெருந்துறைப் பெருமானுக்காகவும், அவனடியார்களுக்காகவும் தாம் கொண்டுவந்த பொருட்களைச் செலவுசெய்தார்.

### மீனவன் அனுப்பிய திருமுகம் :

குறிப்பிட்ட காலத்தில் குதிரைகள் வாராதுபோகவே அரிமர்த்தனன் அவசரமாக மணிவாசகருக்கு விளக்கம்கேட்டு ஓலையனுப்பினன். இவர் முறைப்படி அதனை வாங்கிப்படித்து, பெருந்துறைப் பெருமானிடம் தம் நிலை விளக்கி வேண்டுகோள் விடுத்தார். வானிலிருந்து ஓர்வாக்கு; 'பரிகள் குறித்தபடி வரும்' என்று ஒலித்தது. அதனையே அரசனுக்குச் சொல்லி அனுப்பி ஈசனின் ஆணைப்படி தாமும் மதுரைவந்தார். வேந்தனைச் சந்தித்தார் வாதவூரர். அவன் இவரிடம் 'நீர் கொண்டு சென்ற பொருளும், வரும் குதிரையும் எத்தனை என்று வினவ; இவர் இரண்டிற்கும் அளவில்லையென்றார். ஆனலொன்று நிச்சயம்; இப்போது வரப்போகும் குதிரைப்படை கண்டு மக்கள் 'துரங்கபதி' என்று தங்களை அழைக்கப்போகிறார்கள் என்று கூறி மன்னனை மகிழ்வித்தார். பெருமையும் சிறப்பும் செய்து மணிவாசகரைச் செல்ல விடுத்தான் மன்னன்.

மணிவாசகர் களிறுசுமந்த கண்ணுதல்கோயில் வந்தடைந்து பொற்றாமரையில் நீராடி சித்திவிநாயகரை வழிபட்டு ஆலவாய் இறைவனையும் அம்மையையும் தரிசித்து 'எம்பெருமானே! தாங்கள் அறிவித்தபடி குதிரைகளை வரவழைத்து என்னைக்காக்க வேண்டும். இல்லையானல் வேந்தனின் முனிவுக்கு நான் ஆளாக வேண்டிவரும் என்று பணிந்து மொழிய, மீண்டும் வானொலி, முன்சொன்ன செய்தியை உறுதிசெய்தது.

மனம் மகிழ்ந்த வாதவூரர் இல்லம் வந்தார். உறவும் நட்பும் அவரைச் சூழ்ந்துகொண்டு பலப்பலவிதமாய்க் கேள்விகேட்டன. இன்று நீர் சொன்னபடி பரிகள் வரவில்லையானல் நும்நிலை என்னவாகும் என்று சிலர் கவலையோடு கேட்டனர். கிளைஞரையும் நண்பர்களையும் காத்தலை மறந்தீரோ என்று சிலர் உரத்துக் கேட்டார்கள். மணிவாசகர் காதில் இவையொன்றும் விழவில்லை. சுற்றம், நட்பு, பகை பாசம் எல்லாவற்றையும் இறைவன் என்னை ஆட்கொண்டபோதே அகற்றிவிட்டேன். இனி ஊரெல்லாம் நம் உறவே. சீரும் சிறப்பும் திருநீறணிந்து கண்டிகை பூண்பதிலன்றோ உள்ளது. நன்று தீதென்ற பேதமில்லாமல் எதுவரினும் அதனை இறைவன் திருவுள்ளமாகக் கருதி ஏற்பேன். எதற்கும் அசைவும் அச்சமுங்கொள்ளேனென்று திருவடிகளைச் சிந்தையில் பதித்துக் கலக்கமற்று இருந்தார் மாணிக்கவாசகர்.

(வளரும்)

# திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.**

(மலர் 32. இதழ் 1. பக்கம் 21 - இன் தொடர்ச்சி)

ஐந்தாவது குறள்,

"ஒன்றுனும் ஒன்று திரண்டானும் ஓசையெழா
தென்றுல்ஒன் றன்றிரண்டு மில்"

எனவரும்.

இதன் பொருள் :- ஒன்றுனும் ஒன்றுது - உயிரும் சிவமும் (குடாகாயமும், மகாகாயமும் போலப்) பொருளால் ஒன்றுயிருப் பினும், அவை பின்னர், 'ஒன்றும்' என்றல் கூடாது; ('ஒன்றுதல் என்பது இருபொருளின் செயலாகையால் என்பது கருத்து.) இரண்டானும் ஓசை எழாது - இனி, உயிரும், சிவமும் இருளும், ஒளியும்போல இருவேறு தன்மைப்பட்ட பொருளாயிருப்பினும், 'ஒன்றின' என்னும் சொல் எழுதற்கே வழியில்லை; ('வேற்றியல் புடைய இருபொருள்கள் ஒருஞான்றும் ஒன்றுதல் இயலாதாக லின். என்பது கருத்து.) என்றுல் - இரண்டும் இவ்வாறுதலின்; ஒன்றன்று இரண்டும் இல் - உயிரும், சிவமும் பொருளால் ஒன்றும் அன்று; தம்முள் இயையாத வேற்றியல் புடைய இருபொருள் ஆதலும் இல்லை.

விளக்க உரை :- உப்பும், அப்பும் போல இயைந்து ஒன்று தற்குரிய இருபொருளாய் ஒன்றி, வேறுகாணப்படாது, நிற்கும் என்பதாம். "எனைத்தானும் நல்லவை கேட்க; அனைத்தானும்- ஆன்ற பெருமை தரும்*" என்பதிற்போல, 'ஆயினும்' என்பது இரண்டிடத்தும் 'ஆனும்' என மருவிற்று என்பதனை நிரம்ப அழகிய தேசிகர் உரை பற்றியும் உணர்க. உம்மைகள் எச்சப் பொருள. "ஒன்றுது" என்றது, 'ஒன்றுதல் என்பது பொருள் படாது' என்றவாறு. "ஒன்றன்று" என்பதில் அன்மைச்சொல், மறுக்கப்படும் பொருள்மேல் வந்தது. "இரண்டும்" என்பதில் 'ஆதல்' என்பது எஞ்சி நின்றது.

---

*குறள் – 416.

இதனால், 'உயிரும், சிவமும் இருமுதல்கள் அல்ல' என்னும் ஒருமைக் கொள்கையும், (ஏகான்ம வாதம் அல்லது அபேத வாதம்) 'அவை இரண்டும் வேறுபட்ட இருதன்மையுடைய பொருள் களே' என்னும் இருமைக் கொள்கையும், 'துவிதம் அல்லது பேத வாதம்) பொருந்தாமை காட்டி, மேலைக் குறளில் கூறப்பட்ட ஒன்றும் முறைமை வலியுறுத்தப்பட்டது.

ஆருவது குறள்,

> " உற்றுரும் பெற்றுரும் ஓவார்; உரையொழியப்
> பற்றுரும் அற்றுர் பவம் "

எனவரும்.

இதன் பொருள் :- உற்றுரும் தாம் வேறு நில்லாது சிவத் திலே பொருந்தி ஒன்ருயினவரும்! பெற்றுரும் - அதன்மேல் அச் சிவத்தினது இன்பத்தைத் தமதாகப் பெற்று அதனுள் அழுந் தினவரும், ஓவார் - சிவத்தினின்றும் நீங்கி, மீளப் பிறவார். உரை ஒழியப் பற்றுநும் பவம் அற்றுர் - இனி அவ்வுற்றுரும், பெற்று ரும் போல, 'யான், எனது' என்பன அற்று மெய்ப்பொருள் ஒன்றையே பற்றும் நிலைமையைப் பெருதவரும் பிறவி அற்ற வரே ஆவார்.

விளக்க உரை :- 'கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்' என ஞானம் நான்காகி நிகழும்; அவை சிவத்தை அடை வித்தலில் ஒன்றின் ஒன்று முதிர்ந்தனவாம், ஆகவே, 'கேட்டல், சிந்தித்தல்' என்னும் இரண்டிலும் யான், எனது என்பன அறுதல் இல்லை. தெளிதலில் அவை அறுமாயினும், சிவானந் தம் நிரம்பத் தோன்ருது. நிட்டை கூடியவழியே அது நிரம்பத் தோன்றும். ஆகவே, தெளியவும், நிட்டை கூடவும் பெருதார் ஏனையோர் போலப் பிறப்பிற்கு ஆளாவர் போலும் என்னும் ஐயம் நிகழாமைப் பொருட்டு, "உரை ஒழியப் பற்றுரும் அற்றுர் பவம்" என்று அறிவுறுத்தினர். "ஓவார்" என்பதே பாடம் ஆதலை, நிரம்ப அழகிய தேசிகர் உரையால் அறிக.

இதனால், ஞானத்தின்வழிச் சிவத்தில் ஒன்றுதலில் நிலை வேறுபாடுகள் உண்மை கூறப்பட்டது.

கேட்டல் சுத்த சாக்கிரமாயும், சிந்தித்தல் சுத்த சொப்பன சுத்த சுழுத்திகளாயும், தெளிதல் சுத்த துரியமாயும், நிட்டை

சுத்த துரியா தீதமாயும் நிகழ்வனவாம். அதனால் துரியம் அருள் விளக்கமேயன்றி, ஆனந்த விளக்கம் அன்று. துரியாதீதமே ஆனந்த விளக்கமாம்.

"பெற்றுர்" எனப்பட்ட அதீத நிலையில் நின்றோர்க்குப் பிறப் பில்லை என்பது தெளிவு. துரியத்தில் சென்றபின் அதீதம் கூடுதல் எளிது என்பது பற்றி "உற்றுர்" ஆகிய அவரையும் பெற்றுரோடு ஒருங்கு வைத்து எண்ணினுர். அவ்விரு நிலை யினும் செல்லாதார்க்கும் பிறப்புச் சிறுபான்மையே யாதலின், 'பற்றுரும் அற்றுர் பவம்" என்றுர். இவரை முன்னை யிருவரோடு வைத்து ஒருங்கு கூருது வேருக வைத்தும், "பற்றுரும்" என எதிர்மறை வினைப் பெயராற் குறித்தும், உம்மை கொடுத்தும் ஓதினமையால், இவர்க்குச் சிறுபான்மை பிறப்புக் கூடினும் கூடும் என்பது குறிப்பால் உணர்க.

ஏழாவது குறள்,

" பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமினி
நீயொன்றுஞ் செய்யாது நில் "

எனவரும்,

இதன் பொருள் :- நீ - (கேட்டுச் சிந்தித்த மாணவகனே,) நீ; பேய் ஒன்றும் தன்மை பிறக்கும் அளவும் - உனக்குப் பேய் பிடிக்கப்பட்டது போன்ற தன்மை உண்டாகு மளவும்; இனி ஒன்றும் செய்யாது - இனிமேல் யாதொரு சிந்தனையையும் செய்யா மல்; நில் - சிந்தித்துக் கண்ட அந்தப் பொருளையே நோக்கி நில்.

விளக்க உரை :- ஞானச் செய்தியில் தற்போதம் செயற் படுவது சிந்திக்குமிடத்து ஆதலின்; "இனி ஒன்றும் செய்யாது" என்பதில் "ஒன்று" என்றது, சிந்தித்தலாதலும், 'இனி அது வேண்டா' என்றதனால் அது முற்றுப் பெற்றமையும் பெறப்பட்டன. இப்பொருளை, "நீ" என்றதனை எடுத்தல் ஓசையாற் கூறி உணர்க. இங்ஙனம் கூறவே, 'பெறுதல்' உறுதலின் வழித்தாய் வரும் என மேலைக் குறளிற் கூறிய அவ்வுறுதல் எவ்வாறு வரும்' என உணர அவாவிய மாணாக் கனுக்கு, 'தற்போதம் தோன்றுதவாறு நிற்கவே அது வரும்,' என அறிவுறுத்ததாயிற்று. பேய் பிடிக்கப்பட்டார் தம் உணர் விழந்து நிற்றல் உலகில் காணப்படுவதாகலின், தற்போதம் இழந்து நிற்றற்கு அதனை எடுத்துக் காட்டினுர்.

" பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்
கண்டாரே கண்டார்என் றுந்தீபற;
காணுதார் காணுரென் றுந்தீபற "

என்ற திருவுந்தியைக் காண்க *(1) இதனுல் தன் செயலறுதலே துரிய நிலே வருதற்கு வழியாதல் பெறப்பட்டது.

" செய்தற் கரிய செயல்பலவும் செய்துசிலர்
எய்தற் கரியதனை எய்தினர்கள் - ஐயோ நாம்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு " *(2)

எனத் திருக்களிற்றுப்படியில் இரங்கி யருளிச் செய்தமை அறியற்பாற்று.

இதனுல், அதீதத்திற்கு நேர் வாயிலாகிய துரிய நிலையை எய்துமாறு கூறப்பட்டது.

---

*(1) 35. *(2) 61.

(தொடரும்)

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்

### ஸ்ரீ கம்பஹரேஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

தருமை ஆதீன ஆலயங்கள் மிகவும் தூய்மையாகவும் சிறப்பாகவும், கண்காணிக்கப்படுவதை இத்திருக்கோயிலேக் கண்டாலே தெள்ளிதிற் புலனுகும். சரபேஸ்வர மூர்த்தி மிகவும் அற்புத மூர்த்தியாகவே காட்சியளித்தார். இவ்வரிய பெரிய திருக்கோயிலேத் தரிசிக்கும் பெரும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்ததே ஆண்டவன் அருள்.

(ஒ - ம்.) வ. சிவசுப்பிரமண்யம்,

தலைமைத் தணிக்கை அதிகாரி, மதருஸ்.

25—1—73. (அறநிலேயப் பாதுகாப்புத்துறை.)

25—10—72 புதன்கிழமை காலை நடைபெற்ற
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளிவிழாவின்
இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமையேற்ற
திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி, மகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

( தவத்திரு. குன்றக்குடி அடிகளார் எம். எல். சி. )

நிகழ்த்தியருளிய

# தலைமையுரைச் சுருக்கம்

தருமையும் கமலையும் விரிதமிழ்க்கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்தருளும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களே! தமிழக முதலமைச்சர் மாண்புமிகு, டாக்டர். கலைஞர் அவர்களே! அறநிலைய அமைச்சர் அவர்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! பெருமக்களே! தாய்மார்களே! நண்பர்களே!

இனிய சூழலில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியோடு தொடங்கி, தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழா இங்கே சீரும் சிறப்புமாக நடைபெற்றுவருகிறது. அண்மையில் காசியம்பதியில் முத்திப்பேறெய்திய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இன்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன் தம்பிரான்கள் தமிழறிவு பெற்றுத் திகழவேண்டும் என்பதற்காகவே இக்கல்லூரியைத் தோற்றுவித்தருளினார்கள். நாம் ஆசிரமம்பெற்றுத் தருமையில்தங்கியிருந்தகாலை, தமிழ்பயில விருப்பந்தெரிவித்தோம். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் உடனே கல்லூரியில் இணைந்து பயில இசைவுதெரிவித்தார்கள். இங்கே எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும், நாமும், ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும், நான்கு ஐந்து மாணவர்களுமாகச் சிலருடன் தொடங்கப்பெற்ற இப்பல்கலைக் கல்லூரி, இன்று நானூற்றுக்கும் மேற்பட்ட புலவர் பெருமக்களை உருவாக்கித் தமிழ்ப்பணி செய்ய உலவவிட்ட பெருமையில் வெள்ளிவிழாக் காண்கிறது.

இக்கல்லூரியில் முதன்முதல் மாணவராக இருந்து பயிலவும், பயிற்றவும் கிடைத்த வாய்ப்பினை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் கருணையினால் பெற்றோம். அவர்களது அளவற்ற தமிழ்ப் பற்றும், திருமுறை ஈடுபாடும் இவ்வரிய கல்வி நிறுவனம் தோன்ற வழிவகுத்தன. அவர்கள், தம் அருளாட்சியில்

வெள்ளிவிழாக் கண்டவர்கள். அவர்கள் காலத்திலேயே இப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழா சிறப்புற நடைபெற முயற்சி மேற்கொள்ளப்பெற்றது. தமிழக முதலமைச்சர் மாண்புமிகு. டாக்டர். கலைஞர் அவர்களைக் கொண்டே வெள்ளிவிழா, நிகழ்த்த வேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவுளங் கொண்டார்கள்.

அவர்கள் காலத்தே அது இயலாதுபோயினும், அவர்கள் வழித்தோன்றலாய் அருளரசோச்சும் தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது அன்போடும் ஆசி யோடும் இங்கே வெள்ளிவிழா, சிறப்புற நடைபெறுவது பெரு மகிழ்ச்சியைத்தருகிறது.

இரண்டாண்டுகளுக்கு முன்னரே கலைஞர் அவர்கள் விழா விற்குவர இசைவு தெரிவித்தார்கள். என்றாலும், பல்வேறு குறுக்கீடுகளால் வர இயலாமை ஏற்பட்டு, இன்றே கூடிவந்துள் ளது. அவர்கள் தங்களுக்கு இருக்கும் பல்வேறு அலுவல்களுக் கும் இடையே, தமிழ்க் கல்லூரியின் வெள்ளி விழாவில் பங்கு பற்றுதல் தமிழுக்குச் செய்யும் சிறப்பு என்ற நெஞ்சத்தோடு இங்கே வருகை தந்திருக்கிறார்கள். அவர்களை விழாத் தலைவர் என்ற முறையிலும், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சார்பிலும், பல்கலைக் கல்லூரி வெள்ளிவிழாக் குழுவின் சார்பிலும் கனிவோடு வரவேற்கிறோம்.

அடுத்து, அறநிலைய அமைச்சர், அருமை நண்பர் மாண்பு மிகு. கண்ணப்பன் அவர்களை விழாவில் பங்குபற்றி உரை நிகழ்த் தவும், நூல் நிலையத்திற்கு நூல்கள் வழங்கிச் சிறப்பிக்கவும் கேட்டபோது அவர்களும் பெருமகிழ்ச்சியோடு இசைந்து இங்கே வருகைதந்திருக்கிறார்கள், அவர்களையும் அனைவர் சார்பிலும் அன்போடு வரவேற்கிறோம்,

மற்றும், இங்கே வருகைதந்திருக்கும் நாடாளுமன்ற – சட்ட மன்ற உறுப்பினர்களையும், ஏனையோரையும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

இங்கே, தலைவர் என்ற முறையில், கூட்டத்தைச் சிறப்பாக நடத்திக்கொடுக்கும் கடமை உணர்வோடு, அனைவரையும் வரவேற்கும் முறையில் சில சொற்கள் பேசுகிறோமேயன்றி, இவ் வாய்ப்பில் பேருரை ஏதும் நிகழ்த்த எண்ணவில்லை. விழாத் தலைவர் என்ற முறையிலும், இக்கல்லூரியில் பயின்ற உரிமை காரணமாகவும் மீண்டும் ஒருமுறை அனைவரையும் வரவேற்று, வெள்ளிவிழாக்காணும் பல்கலைக் கல்லூரி மேலும் மேலும் சிறந் தோங்கச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

24—10—72 செவ்வாய்க்கிழமை மாலை தொடங்கிய தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளிவிழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமையேற்ற

திருப்பனந்தாள், ஸ்ரீ காசி மடம்

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

நிகழ்த்தியருளிய

# தலைமையுரைச் சுருக்கம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவடிகளை அடியேன் மனமொழி மெய்களால் வணங்குகின்றேன்.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களே! தமிழக ஆளுநர் மேதகு. கே. கே. ஷா அவர்களே! தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் வெள்ளி விழாவில் பங்கேற்க வந்திருக்கும் பெருமக்களே! மாணவ - மாணவிகளே!

அண்மையில், காசியில் முத்திப்பேறெய்திய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கரத்தால் தொடங்கப்பெற்ற இப்பல்கலைக் கல்லூரி, நாளும் நாளும் நன்கு வளர்ந்தோங்கி நூற்றுக்கணக்கான தமிழ்ப் புலவர்களை உருவாக்கிய பெருமையில் வெள்ளி விழாக் காண்பது கண்டு உள்ளம் பூரிக்கின்றேன். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஹஸ்த விசேஷம் உடையவர்கள். தற்போது தருமையாதீன ஞானபீடத்தில் எழுந்தருளி அருளரசு ஓச்சும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், அடியேனும் தமிழ்க்கல்விபெற உறுதுணை புரிந்த தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி வெள்ளி விழாக் காண்பதும், இவ்விழாவிற்கு அடியேன் தலைமை ஏற்க அமைந்ததும் திருவருட் குறிப்பாகவும் - குருவருட் குறிப்பாகவுமே தோன்றுகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக விளங்கும் நமது மாநில ஆளுநர் மேதகு. கே. கே. ஷா அவர்களே, நம் பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழாவைத் தொடங்கி வைப்பது மிகவும் பொருத்தமான செயலாகும் என்ற திருவுள்ளக் குறிப்போடு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆளுநர் அவர்களை

இங்கே அழைப்பித்து இவ்விழாவினைத் தொடங்கிவைக்கச் செய்திருக்கிறார்கள் என்றே கருதுகிறேன்.

நமது ஆளுநர் அவர்கள் தாம் பசியோடு இருப்பதாக நகைச்சுவையோடு குறிப்பிட்டார்கள். அவர்களுக்குப் பசி மிகுந்திருப்பது உண்மைதான்! ஆனல், அதுவெறும்வயிற்றுப்பசியல்ல; உள்ளப்பசி - அதாவது தமிழ்ப்பசி. அவர்களது தமிழ்ப்பசி, தமிழை ஆசிரியர் வைத்துப் பயிலும் அளவிற்கு அவர்களுக்கு ஆர்வந்தந்திருப்பதுகண்டு உள்ளம் மகிழ்கிறேன். தமிழில் பேரீடுபாடு கொண்டிருக்கும் அவர்கள், தமிழ்க்கல்லூரியின் வெள்ளி விழாவைத் தொடங்குதல் மிகவும் பொருத்தமுடையதே யாகும்.

தமிழறிவூட்டிய பல்கலைக் கல்லூரியின் வெள்ளிவிழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று மட்டுமே விரும்பிய அடியேனை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருள் உள்ளம் தலைமை ஏற்கும்படி பணித்துள்ளது.

தருமையாதீனச் சீடராய், அளவற்ற அருள் நூல்கள் கண்டு, ஸ்ரீகாசிமடத்தைத் தோற்றுவித்த ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் தருமைக்குள் அடி எடுத்து வைத்தபோதே, சிவபோதம் நீங்கிச் சிவபோதம்கைவரப்பெற்றதைப்பண்டாரமும்மணிக்கோவையுள் அழகாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

> " ஊரிற் குறுகினேன் ஓர்மாத் திரையளவு
> பேரிற் குறுகினேன் "

என்ற தொடர் மூலம் 'சிவன்' என்ற சொல்லின் - முதல் எழுத்தின் இரண்டு மாத்திரை, தருமை மண்ணில் கால் வைத்த வுடன் ஒரு மாத்திரையாகக் குறுகி 'சிவன்' என மாற்றமுற்று அடங்கியதாகக் கூறியருளுகிறார்கள். அவர்கள் வழிவந்த அடியேன் அடங்கியிருக்க வேண்டிய இடமாகிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் முன்னிலையில், தலைமை ஏற்பதோ - ஏற்பதாகக் கருதுவதோ சிறிதும் பொருத்தமுடையதாகாது; எனவே, தலைவன் என்ற முறையில் அல்லாது, கல்லூரியின் முன்னாள் மாணவன் என்ற முறையில் சில சொற்கள் பேசக் கிடைத்த வாய்ப்பாகவே இதனைக் கருதுகின்றேன்.

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்திற்கு இங்கிருந்து சென்ற தால், அடியேன் நிலையில் பெரிய மாற்றம் ஏதும் ஏற்பட்டதாகக் கருதுவதற்கில்லை. முன்னோர்கள் இதுபற்றி நகைச்சுவையாக 'க'-

'கா' வாக மாறியிருக்கிறது என்று கூறிவந்ததையே அடியேனும் அடிக்கடி நினைவு படுத்துவது வழக்கம். தருமையில் இருந்தால் 'கட்டளைத் தம்பிரான்'; திருப்பனந்தாள் சென்றால் 'காசித் தம்பிரான்' எனவே, முதல் எழுத்து நீள்வது தவிர தம்பிரான் எப்போதும் தம்பிரான்தான். அவ்வாறு என்றும் இருக்கவே அடியேனும் விரும்புகின்றேன்.

மொழிவளர்ச்சியோடு - சமய வளர்ச்சியிலும் நாட்டங் கொண்டு, மாணவர்கள் பலதுறைகளிலும் சிறக்க வேண்டு மென்ற அருளுள்ளத்தோடு தற்போது தருமையில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பல்கலைக் கல்லூரியைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகிறார்கள்.

இத்தகு சிறப்பு வாய்ந்த பல்கலைக் கல்லூரி. வெள்ளி விழாக் காணும் நேரத்தில், கலந்து மகிழும் அரிய வாய்ப்பினை அருளிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவடிகளுக்கு மீண்டும் என் வணக்கங்களைச் சேர்ப்பிப்பதோடு, வெள்ளி விழாக் காணும் பல்கலைக் கல்லூரி மேலும், மேலும் தழைத்தோங்கி பொன்விழா - வைரவிழாக் கண்டு சிறக்கவும், இங்குப் பயிலும் மாணவ மாணவியர் நலம்பல பெற்று வாழவும் ஸ்ரீ செந்திலாண்டவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

### தருமையாதீனம்

### ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

ஞானப்பால் அருந்திய திருஞானசம்பந்தர் புனிதம் பெற்ற சீகாழி சட்டைநாதர் கோவிலில் நுழைந்தவுடனேயே மனத்தால் என்னை இழந்தேன். கோவிலின் புற அழகும், அக அழகும் கற்பனைக்கும் எட்டாத - சொல்லுக்குள் அடங்காத சுகத்தை அருளுகின்றன. அடிக்கடி காணும் ஆர்வத்தை, அம்மையும் அப்பனும் ஈடேற்றவேண்டும். வைத்தீஸ்வரன்கோவில் வடிவழகும், முத்துக்குமரனின் தரிசனமும் சித்தத்தில் சிலிர்ப்புத் தருகின்றன.

(ஒ-ம்.) திருச்சி பாரதன்
செய்தி ஆசிரியர்,
தினத்தந்தி. திருச்சி 1.

26—1—73.

---

வரலாற்றுச் சிறுகதை

# குராப்பள்ளி*

## டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

அடர்ந்த மரங்களுக்கிடையில் எழுந்தோங்கிய அத்திருக் கோயில் விமானம் மாலை நேரத்து மஞ்சள் வெயிலில் மின்னிக் கொண்டிருந்தது. கண்கவர் சிற்ப, சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய விமானம் அது. அழகான வண்ணப்பூச்சு கண்ணுக்கு விருந்தாக இருந்தது. கோயிலை ஒட்டி இருந்த ஒருசாரி வீடுகள் உள்ள நான்கு பெரிய வீதிகள். ஆம்; திருவிடைக்கழி என்ற திருப்பெயருடன் உள்ள அச்சிற்றூர், சோழர் காலத்தில் பெரிய புகழ் உடையதாக விளங்கி வந்தது. தஞ்சைப் பெருமன்னர் இராசராசச் சோழரும், அவரது திருமகன் இராசேந்திரச் சோழரும் அளித்த நிவந்தங்களுடன் கோயிற்பணி சிறப்புற நடந்துவந்த காலம் அது; சற்றேறக்குறைய ஆயிரம் ஆண்டு களுக்கு முன்.

திருவிடைக்கழிக்குக் கிழக்கே உள்ள தில்லையாடிப் பெருஞ் சாலையில் இரண்டு அழகிய வெண் புரவிகள் மிக வேகமாக ஓடி வந்துகொண்டிருந்தது. அவ்வழகிய புரவிகளின் மீது இருந்த அழகிய இரண்டு இளைஞர்களும் ஏதோ சிந்தனை வசப்பட்டவர் களாகவும், அடிக்கடி ஏதோ இன்றியமையாத செய்திகளைப் பற்றித் தீவிரமாக உரையாடியவர்களாகவும் காணப்பட்டனர். படைவீரர்களுக்குரிய உடையணிந்தவர்கள் இவர்கள்; புலி இலச்சினையிட்ட மார்புப் பகுதிகளை உடையவையாக அவர்கள் அணிந்திருந்த விலையுயர்ந்த பட்டுக் கஞ்சுகங்கள் இருந்தன. சோழர் அரசியலில் தீவிரப் பங்கு கொண்டிருந்த அவர்கள் திருவிடைக்கழிப்பகுதிக் கோயில் திருப்பணியை முடித்த பொற் கோயில் நம்பியும், தில்லை மூவாயிர நம்பியும் ஆவர்.

அரசியல் தொடர்பாகத் தஞ்சை சென்று பெருமன்னர் இராசேந்திர சோழ தேவரைக் கண்டு பேசிவிட்டுத் தில்லையாடி வழியே தம்மூர்க்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

---

* திருவிடைக்கழிக் கோயிலில் உள்ள சோழர் காலக் கல் வெட்டுக் குறிப்புக்கள், சிற்பங்களினின்றும் எழுந்த கற்பனை.

ஆதாரம்: தருமையாதீனம் ஒன்பதாம் திருமுறை - தல வரலாறு - பக். 49 – 51. 1969.

ஊர் எல்லை நெருங்கியதும் திருவிடைக்கழித் திருக்காமேசுவரர் திருக்கோயில் விமானம் கண்களிற்பட்டதும் கரங்குவித்து வணங்கிவிட்டு மெல்ல நடத்தினர் குதிரைகளை.

சேனைபதிப்பிள்ளைப் பெருந்தெருவில் ஐந்நூற்றுவப் பிள்ளையார் கோயில் வந்ததும் குதிரைகளை விட்டுக் குதித்து இறங்கிப் பிள்ளையார்க்கு வணக்கம் செலுத்திவிட்டுப் புறப்பட்டனர். ஆழ்ந்த சிந்தனை அவ்விருவர் முகத்திலும் இருந்தது. கூத்தன் சிவதவகன் என்ற வணிகப் பெருஞ்செல்வரின் அற்புதத் திருப்பணி அப்பிள்ளையார் கோயில்.

திருக்கோயிலுக்குக் கீழ்புறமிருந்த பெருவீதியில் கம்பீரமாக நின்றிருந்த திருவலஞ்சுழி உடையான் மண்டபத்தின் புறத்துத் தூண்களிற் புரவிகளைப் பிணைத்துவிட்டு உள்ளே நுழைந்தனர் இருவரும்.

“ வரவேண்டும் வரவேண்டும் ! திருவிடைக்கழித் திருக்காமேசுவரர் திருப்பணித் திலகங்களே ; வரவேண்டும் ” என்று எழுந்துநின்று வரவேற்றார் குன்றத்து நாராயணன்; சிறந்த வேத விற்பன்னராக இருந்த அவருடைய அன்புகனிந்த வரவேற்பை ஏற்று முன்னே உள்ள இருக்கையில் அமர்ந்தனர்.

“ நாராயணரே ! நம் பெருமன்னர் இராசேந்திர சோழர் அண்மையில் திருவிடைக்கழிக்கு வருவதாக உள்ளார்; குராப் பள்ளித் துஞ்சிய திருமாவளவர் பின்றோன்றலாகிய நம் பெருமன்னர், அப்பெருமன்னர் அமரவாழ்வு எய்திய அருந்தலத்தை வழிபட விழைகின்றார் ” என்றார் பொற்கோயில் நம்பி.

“ அப்படியா ? மகிழ்ச்சிக்குரிய பெருவிழா; நம்பிகளே ! நம்முடைய ஊர்க்கு முதன்முதலாக வருகைதரும் மன்னரை எல்லோரும் ஒருங்கிணைந்து வரவேற்போம் ” என்று உவகை பொங்க உரைத்தார் நாராயணர்.

நாராயணரே ! தாங்கள் போதிமங்கலத்தில் நிறுவியுள்ள வேதபாடசாலைக்கும் இங்கு வருகைதரும்போது நம் பெருமன்னரை அழைத்துவர எண்ணியிருக்கின்றோம் ” என்றார் தில்லைமூவாயிர நம்பி.

“ மலையாளத்திலிருந்து வந்து வேதம் படிக்கும் அந்தணச் சிறுவர்களுடைய அறிவுலகத்தை மன்னர் பார்த்திடவும், பரிசளித்துப் பாராட்டிடவும் அது வாய்ப்பாகும் என்பது எங்கள் நம்பிக்கை ” என்றார் பொற்கோயில் நம்பி தொடர்ந்து.

" என்னுடைய பாக்கியம் " என்றார் நாராயணர் மலர்வுடன். திருக்கோயில் மாலை வழிபாட்டு மணியோசை ஒலித்தது; " குரா நிழல் அமர்ந்த குழகா போற்றி " என்று கண்மூடிக் கரங்குவித்துக் கூறியபடியே எழுந்தார் குன்றத்து நாராயணர். அவருடைய உள்ளத்தில் கோயிற்காளையின் பக்திபரவச மிகுந்த தோற்றம் எழுந்து மறைந்தது.

**திருக்குடந்தை மடத்தின் பின்புறமிருந்த பசுமடத்தில் கம்பீரமாக நின்றிருந்தது அந்த அழகிய காளை; நீண்ட உறுதியான கொம்புகளும், திரண்ட இமிலும், உயர்ந்த தோற்றமும், கொழுவிய மேனியும் கொண்டு நின்றிருந்த அந்தக் காளையின் பக்கத்தில் நின்று, அதன் காவலனான யாதவன் கண்ணபிரான் அதன் கம்பீரத்தில் ஈடுபட்டவனாய் நின்றான்.

இறைவன் உகந்தேறும் இடபவாகனமே, அவன் அகக் கண்ணில் எழுந்தது. இமைப்பொழுதுகூட விடைக்கழிப் பெருமானைத் தான்மறந்தறியாதது போலவே; அதுவும் எப்போதும் அப்பெருமானைத் தியானித்தபடியே இருக்கும்; அதன் தெய்விகத்தை நினைந்து உருகினான் அவன்.

" என்னப்பா, கண்ணா! கோயிற்காளை பக்கத்திலேயே நின்று எப்போதும் காவல்காக்கின்றாயே " என்று கூறியபடியே தில்லை மூவாயிர நம்பி வந்தான். " அடடே, ஐயாவா! தஞ்சாவூரிலிருந்து எப்போது வந்தீர்கள். சக்கரவர்த்திகள் வருகிறார்களா ?" என்று பணிவும் ஆவலும் பொங்கக் கூறிப் பக்கத்தில் வந்து நின்றான் கண்ணபிரான். " ஆம்; நம் பெருமன்னர் இன்னும் ஏழுநாட்களில் நம் திருவிடைக்கழிக்கு வரப்போகிறார்; உன்னுடைய கோயிற் காளையின் தெய்வீக அழகைக் கண்குளிரப் பார்க்கத்தான் போகிறார் " என்றான் நம்பி. " ஐயா! இது காமேசுவரரின் வாகனமாகக் கருதத்தக்கது. மன்னர்பிரான் இதனைக் கண்டார்கள் என்றால் அதைவிட எனக்கு வேறு என்ன பேறு இருக்கிறது " என்றான் கண்ணபிரான்; அவனுடைய முகத்தில் பெருமிதம் சுடர்விட்டது.

" இன்று நம் கோயிலில் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சியைக் கேட்கவில்லையே, நம்பி " என்று கேட்டபடியே உள்ளே நுழைந்தான் பொற்கோயில் நம்பி. " என்னப்பா, என்ன அது " என்றான் பரபரப்புடன் மூவாயிர நம்பி.

" நம் அர்ச்சகர் இன்று அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சிக் காலத்தில் சோமவார வழிபாட்டைத் தொடங்கக் கோயிலுக்குள்

நுழைந்து, கருவறையிலுள்ள பெருமானுடைய திருமஞ்சனத் திருக்குடத்தை எடுக்கப் போனபோது......'

'' எடுக்கப் போனபோது......' ஆவலுடன் குறுக்கிட்டான் பொற்கோயில் நம்பி.

'' குடத்தின் பக்கத்தில் ஒரு நாகம் படமெடுத்தாடியபடி இருந்திருக்கிறது. குடத்தை மூன்றுமுறை வலம்வந்து, பெருமான் முன்பு வந்து நின்று படமெடுத்து ஆடாமல் அசையாமல் இருந்ததாம்; பிறகு பெருமானை வலம்வந்து கோமுகி வழியே வெளியேறிவிட்டது. அர்ச்சகர்க்கு அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் தாங்கவில்லை " என்று முடித்தான் நம்பி.

'' நம்முடைய மூர்த்தி எவ்வளவு பெரியவர் என்பதற்கு இதுவும் ஒரு சான்று ஐயா " என்றான் கண்ணபிரான். சாயரட்சை மணி ஒலித்தவுடன் இந்தக் காளை உணவு உண்ணாமல் திருக்கோயில் கோபுரத்தையே நோக்கியபடி நிற்பதையும் மாலை மாலையாகக் கண்ணீர் பெருக்குவதையும் நான் பார்த்தபோது எனக்கு உண்டாகிய பக்தி பரவசம் என்னென்று சொல்வேன் " என்று தொடர்ந்தான் யாதவக் கண்ணன்.

வீரர் இருவரும் அடைந்த மெய்ப்பாட்டிற்கு அளவே இல்லை. கடவுள் உணர்வு உலகில் பெருகுவதற்காக அவ்வப்போது திருவருள் நிகழ்த்திவரும் அற்புதங்களின் அளவிலாற்றலை ஆரே உணர முடியும்!

***தொடர்ந்து வாரந்தோறும் சோமவாரத்தன்று திருமஞ்சனக் குடத்தை வலம் வந்து, பெருமானைப் பணிந்து அந் நாகம் வெளியேறும் நிகழ்ச்சி நிகழலாயிற்று. இறைவனுடைய திருவருள் வழிபாட்டில் அஃறிணை உயிர்கட்கும் உள்ள ஈடுபாட்டை உலகம் உணரத் திருக்காமேசுவரர் செய்யும் திருவிளையாடலாகவே நினைத்து மக்கட்கூட்டம் திருவிடைக்கழி நோக்கித் திரள் திரளாகச் செல்லலாயிற்று. சோழர் படையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் செய்த ஒப்பற்ற திருப்பணியால் விளங்கிய அத்திருக்கோயில் தமிழக வரலாற்றில் ஓர் இணையற்ற கேந்திரமாகிவிட்டது. திருமாவளவன் என்ற கரிகாற் சோழப்பெருமன்னர் உலகவாழ்வை நீத்த சரித்திரப் பெருமைபெற்ற விடைக்கழி இப்போது புதிய தெய்விகப் பெருமையும் சேர்த்துக்கொண்டது; தஞ்சைத் தலைநகரில் விடைக்கழியின் பெரும்புகழ் எட்டிற்று. இராசேந்திர சோழப் பெருமன்னர், தம்முடைய அயர்வற்ற அரசியற் சூழ்ச்சிக்கிடையே - விடைக்கழி போந்து விடையேறும்

வித்தகன் விளையாடலைக் கண்குளிரக் கண்டு மகிழ மேலும் தீவிரம் கொண்டார்; அரசுத் தூதுவர் குராப்பள்ளிக்கு அரசர் அனுப்பிய திருமுகத்துடன் விரைந்தனர்.

அடுத்த சோமவார நன்னாள்: இளங்காலைப்பொழுது; சோழப் பெருமன்னருடைய பல்லக்கு முன்னும் பின்னும் பரிவாரங்கள் சூழத் திருவிடைக்கழிக்குச் செல்லும் குறுக்குச்சாலையில் வந்து கொண்டிருந்தது. ஊர் எல்லையில் போதிமங்கலத்து வேத மாணவர்களின் வேத முழக்கத்துடன் பூரண கும்பம் கொடுத்து வரவேற்று உடன் சென்றனர்; தில்லை மூவாயிர நம்பியும், பொற்கோயில் நம்பியும், குன்றத்து நாராயணரும்.

திருக்கோயில் வாயிலில் பல்லக்கினின்றும் இறங்கினார் இராசேந்திரப் பெருமன்னர். உடன்கூட்டத்து அதிகாரிகள் உடன்வரக் கோயிலுக்குள் சென்றார். திருக்காமேசுவரர் திருமுன்பு கண்ணீர் வார நின்றிருந்த தெய்விகக் காளையும், கண்ணபிரானும் மன்னர்பிரான் கண்ணிற்பட்டனர். நாக வழிபாட்டைக் கருவறை வாயிற்புறமிருந்து கண்ட பெருமன்னர் கண்களில் பக்திக் கண்ணீர் பெருக்கெடுத்தது. "குராப்பள்ளியமர்ந்த குழகா போற்றி!", "திருமாவளவர்க் கருளிய தேவரே போற்றி" என்று உணர்ச்சிகரமான குரலில் கூவினர் குன்றத்து நாராயணர்.

"நம்பிகளே! விடைக்கழியின் தெய்விக மாண்பு என் நெஞ்சை உருக்கிவிட்டது; முதலமைச்சரே! எதிர்காலத் தமிழகமும் இத்திருக்கோயில் மாண்புகளைத் தெளிந்துணர வேண்டும்; தக்க சிற்ப வடிவில் இவ்வரலாற்றைக் கோயிலில் அமைக்க ஆவன செய்யுங்கள்" என்று ஆணையிட்டுப் பணிந்து வலங்கொண்டு புறப்பட்டார் சோழப் பெருமன்னர். "கங்கையும் கடாரமும் கொண்ட காவலர்! வாழ்க வாழ்க!" என்று அனைவரும் முழங்கிய முழக்கம் கோயிற் கோபுரங்களில் பட்டு எதிரொலித்தது.

இரண்டாம் பிராகாரத்து வடக்குமதிற் சுவரில் உள்ள இரண்டு பிரதிமைகளும், அவற்றின் தலைப்பில் பொற்கோயில் நம்பி, தில்லை மூவாயிர நம்பி என்ற பெயர்களும், இவற்றின்கீழ் ஒருமேடையில் காளை, இடையன், குடம், பாம்பு ஆகியவற்றின் அமைப்பும் தக்க சிற்பி யொருவரால் அமைக்கப்பெற்றது. இன்றும் இத்தலத்திற்குச் செல்லும் அன்பர்கள் இவற்றைக்கண்டு களிக்கலாம்; தெய்விக நலம் உணர்ந்து தெளியலாம்; சோழர் கலையுணர்வும் பக்திவுணர்வும் நெஞ்சில் விரவக் காணலாம்.

# திருவாசகத்துள் அன்பியல்

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி,

**சிந்தனை ஓட்டம் :**

நெகிழ்ச்சியும், உருக்கமும், அருளனுபவ வெளிப்பாடும் திருவாசகத்துள் காணப்படுவனபோல், தமிழ் நூல்களுள் யாண்டும் காணப்படவில்லை. இதனை, ஓர் அன்பிலக்கியம் எனவும், அருளனுபவப் பெட்டகம் எனவும் சான்றோர் பலரும் பாராட்டிப் போற்றுவர். அறிவியலும் - அருளியலும், இன்பியலும் - உலகியலும், திருவாசகத்துள் காணப்படினும், அன்பின் இயல்பைத் திருவாசகம் ஏதோ ஒரு நோக்கில் விரிவாக வரையறுத்திருக்க வேண்டும். இல்லையென்றால், அன்புக் கருவூலமாக - அன்புப் பிழம்பாக - அன்பின் பயனாக இதனைத் தண்டமிழ்ச் சான்றோர் பெரிதெடுத்துப் போற்றியிருக்க இடமில்லை. திருவாசகத்துள் அன்பியல் பொங்கும் அருமைப்பாட்டை ஒரு கோணத்தே நின்று பார்க்கும்போது ஏற்படும் புதுமைகள் எவ்வளவு நலமுடையனவாக நம்மை ஈர்க்கின்றன! அதைக்காண முயலும் முயற்சியில் நம் சிந்தனை ஓட்டத்தை எங்கெங்கோ கொண்டு செல்கிறோம்.

**சுவையனுபவம் :**

நுண்பொருள்களை அறிவிற்கே புலப்படுவன எனவும், அனுபவத்திற்கு மட்டுமே வருவன எனவும் இரண்டு வகைப் படுத்தலாம். கற்கண்டின் சுவை பற்றி ஒருமணிநேரம் விளக்க முடியும்; என்றாலும், கேட்பான் நாவில் கற்கண்டின் சிறு கூறு படும் போதுதான் சுவையனுபவம் நிறைவு பெறமுடியும். பொதுவாகவே, நாம் ஒட்டி உறவாடும் பொருள்களையும், நம்மோடு மிகநெருங்கிய தொடர்புடையாரையும் ஆராய்வதும் இல்லை; ஆராய முற்படுவதுமில்லை. குணங்களும் - சுவைகளும் நமக்கு மிக உறவுடையன. ஆயினும் அவற்றை இன்ன இலக்கணத்த என வரையறுத்துக்காட்டவோ, தெளிவுபடவுணர்த்தவோ நாம் முயன்றதே இல்லை. இந்தக் குறைபாடே அன்பியல் பற்றி ஆராயத் தடையாக நிற்கிறது. அன்பாவது யாது என்ற வினாவிற்கு ஒரு சரியான வடிவத்தை வரையறுத்துக் கொண்டாலன்றி அவ்வியல் பற்றிய திருவாசகக் கண்ணோட்டம் முழுமையாக அமைய முடியாது. அன்பை அறியாதார் யார்?

நம்மால் நாளும் நாளும் உணரப்படுவதாகிய அன்பை, நாம் உணர்ந்த அளவு, இலக்கணங்காட்டி விளக்கும்வல்லமையைப்பெற்றிருக்கவில்லை. பின், அன்பினை விளக்குவது தான் எங்ஙனம்? நம் சிந்தனை ஓட்டத்தில் எண்ணற்ற செந்தமிழ் இலக்கியங்கள் நிழலாடுகின்றன. எங்கேனும் அன்பு விளக்கப்பட்டிருக்கிறதா? சிந்தனையைக் கூர்தீட்டுகிறோம்.

## முப்பாலுள் ஏமாற்றம் :

'எல்லாப்பொருளும் இதன் கண் உண்டு' என்ற நினைவோடு திருக்குறளில் 'அன்புடைமை' என்ற அதிகாரமே அமைந்திருப்பதை நினைகிறோம். 'வாய்மை எனப்படுவது யாதெனின்' என வினவி விடைதரும் ஆசிரியர், 'பழமை எனப்படுவது யாதெனின்' எனக் கேட்டு மறுமொழிதரும் வள்ளுவப் பெருந்தகை, 'பேதைமை என்பதொன்று யாதெனின்' என வினவிக்கொண்டுவிளக்கும் அறஇலக்கிய முதல்வர். அன்பாவது யாதென விளக்குகிறாரா என விரைந்தால், அங்கும் ஏமாற்றமே நிற்கிறது. அன்பின் சிறப்பும் - அன்பின்மையால் விளையும் தீமைகளும் சுட்டப்படுகின்றனவே தவிர அன்பிலக்கணம் அங்கே விளக்கப்பெறவில்லை, 'ஆர்வலர் புன்கணீர்' பற்றிய குறிப்புக் கூட அன்பின் மறைக்கமுடியா இயல்பினை விளக்க வருகிறதே யன்றி, அன்பின் இலக்கணமாகக் கொள்ளப் பயன்படவில்லை.

## நிறைவுதாரா நெய்தற்கலி :

ஆற்றுதல் - போற்றுதல், அறிவு - செறிவு, நிறை - முறை போன்ற நுணுக்கப் பண்புகளை விளக்கும் நெய்தற்கலி, அன்பினைப் பற்றிச் சிறு குறிப்புத் தருகிறது. 'அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை' என்ற அக்குறிப்புக்கூட தெருளாத அகப்பொருள் தலைவனைத் தெருட்டித் தலைவியை அவனொடு கூட்ட முயன்ற தோழியின் அப்போதைக்குபகாரப் படும் விளக்கமாக அமைகிறதேயன்றி நிறைவு பெற்றிருக்கவில்லை.

## இலக்கண உறவு :

பாலை நிலமாவது யாது என்ற குறிப்பினைத் தொல்காப்பியம் தரவில்லை. ஆனால், பின்தோன்றிய சிலம்பு நில அமைப்பை அழகுபட அமைத்துக்காட்டுகிறது. இலக்கணத்திற்கு - இலக்கியம் அங்கே நலஞ்சேர்த்தது போல, அன்பாவது யாதென்ற இலக்கிய ஆய்வு வினவிற்கு, ஓர் அகப்பொருள் இலக்கண நூல்

திட்டவட்டமான விடைதந்து நிறைவுசெய்யும் அருமைப்பாட்டை நினைக்கையில் இலக்கண - இலக்கிய உறவின் இன்றியமையாமை நம்முள் உறுதிபூத்துத் துலங்கக் காண்கிறோம்.

## களவியல் அன்பு :

பொருளிலக்கண நூல் பெறுது கவன்று நின்ற பாண்டி மன்னனுக்கு ஆலவாயில் அழல் நிறக்கடவுள் கருணை மீதூர்ந்து அருளிய பெருஞ் சிறப்புடையது; களவும் கற்புமாக அறுபது நூற்பாக்களானியன்ற 'இறையனர் களவியல்' என்ற அருநூல். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கடைச் சங்கத்தின் தலைமைப் புலவராக விளங்கிய நக்கீரர் பெயரால் அந்நூற்கு அமைந்த செந்தமிழ் நலமிக்க பேருரையில், நாம் காணவிழைந்த அன்பின் இலக்கணத்தைப் பூரணமாகக் காண்கிறோம். அகப்பொருள் தலைவன் தலைவியரிடையே எழும் காதல் அன்பினையே நக்கீரர் உரை விளக்க வருகிறது. குடத்துள் விளக்கிருக்கலாம்; வெளியில் தெரியாது. நம்ப மறுப்பாளைத் திறந்து காட்டி இதோ பார் இதனுள் விளக்கு என அறிவிக்கலாம். நெஞ்சகத்து அன்பை அங்ஙனம் திறந்து காட்ட முடியுமா? நக்கீரர் வினவுகிறார். பின் அன்பினை அறிவதுதான் எங்ஙனம் என்ற வினவிற்கும் அவரே விடை தருகிறார்.

> " அன்பாவது...' குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும்போல ' இதுகாண் அன்பு என்று போதத்திறந்து காட்டலாகாது. அன்புடையரான குணங் கண்டவிடத்து இவை உண்மையான் ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக் கொள்ளற் பாற்று "

எனவே, அன்பை அதற்குரிய குணங்களின் வெளிப்பாட்டால் அறியக்கூடுமெனப் பேசவரும் நக்கீரர் மேலும் விளக்குவார் :

> " அன்புடையரான குணம் யாவையோ எனின் (1) சாவிற்சாதல் (2) நோவில் நோதல் (3) ஒண்பொருள் கொடுத்தல் (4) நன்கினிது மொழிதல் (5) புணர்வுநனி வேட்டல் (6) பிரிவு நனி இரங்கல் என இவை. "

ஒத்த அன்புடையார் எனப் பாராட்டப்படும் தலைவன் - தலைவியரிடை நிகழும் அன்பின் திறத்தை அனுமானித்துக்கொள்ள மேற்கண்ட ஆறு நிலைகளன்களை வகுத்துக் காட்டுகின்றார். ' தன்னுயிர் கொண்டு அவன் உயிர் தேடுநள்போல் ' 'கணவனை

இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என உயிர் நீத்த பாண்டிமா தேவியின் வாழ்வில் அன்பின் வெளிப்பாடு 'சாவிற்சாதல்' என்ற நிலைக்களத்தே வைத்து உணர்ந்து கொள்ளப்படுகிறது. தலைவனின் துயரத்திற்குத் தான் நோதலும், தனக்குரிய உடைமைகளை எல்லாம் அவனுக்கே ஈந்துவிடும் பேரன்பும், தலைவனுடைய பெருஞ் சிறப்புக்களைப்பலபடஎடுத்தியம்பி நிறைவு காணும் காதல் நெஞ்சும், அவனோடு கூடி மகிழ எண்ணும் பெருவேட்கையின் வெளிப்பாடும், அவனைப் பிரிந் துறையும் காலத்தே அப்பிரிவாற்றாது கழிபெரும் ஆற்றாமை கொண்டு புலம்புதலுமாகிய நிகழ்ச்சிகளின் நிலைக்களத்தின்மீதே ஒரு தலைவியின் அன்புடைமையின் ஆழத்தை அறிந்துகொள்ள முடியுமென்ற நக்கீரரின் விளக்கந்தான் எத்தனை ஆழமுடைய தாக விளங்குகின்றது!

## அகவியலும் அருளியலும் :

குறைவிலா நிறைவாய் விளங்கும் இறைவன் ஒருவனே தலைவன் எனப்படுவான். சிற்றறிவும், சில வாழ்நாளும் பெற்ற உயிர்கள் யாவும் அவன் முன்னிலையில் தலைமை இழந்து, அவன் திருவடிப் பேறெய்த முயலும் முயற்சியும், வேட்கையுமுடைய தலைவியர்களாகவே விளங்குகின்றன என்பதுவும் அருளாளர்கள் வலியுறுத்தியிருக்கும் சமயக் கோட்பாடுகள் என அறிகிறோம். புற உலகத்தே ஆடவர் - பெண்டிரிடையே தோன்றும் அன்பிற்கு வகுத்த அதே இலக்கணத்தை அகவாழ்வாகிய அருளியல் வாழ் விலும் கொண்டு கூட்டி ஆராய முற்படுதல் மிகப் பொருத்த மாகவே அமையும்.

ஒப்பற்ற ஆன்மநாயகனாகிய சிவபெருமான் திருவடிக்கு மாணிக்கவாசகராகிய நாயகி வைத்த அன்பை மேற்கண்ட அன்பிலக்கணத்தோடு தனித்தனி இணைத்துக்காண்கையில் திருவாசகத்தே அன்பியல் நுட்பமாகவும்-விரிவாகவும் அமைந்து கிடக்கும் பாங்கு நம் நெஞ்சத்தே தேன்பாய்ச்சிச் சிலிர்க்கவைக் கிறது.

## சாவாமூவாப்பெரியன் :

அகவாழ்விற்கு - காதல்வாழ்விற்கு உரைத்த அறுவகை அன்பின் நிலைக்களன்களுள் 'சாவிற்சாதல்' என்ற ஒன்று அருளியல் அன்பில் வீழ்ந்து படுகிறது. சாவாமூவாப் பெரிய னாகிய சிவபெருமானுக்குமுன் 'சாவிற்சாதல்' என்ற இலக்கணம் வலிவிழந்ததனால், அஃதொழித்து எஞ்சிய ஐந்து நிலைக்களன் களிலேயே மணிவாசகர் காட்டும் அன்பின் ஆழத்தை உணர முடிகிறது.

## ஐயமும் தெளிவும் :

ஒருகோணத்தே நின்று திருவாசகப் பாடல்களை ஆராய்ந்தால், இந்த ஐந்து நிலைக்களன்களுக்குள்ளேயே அனைத்துப் பாடல்களும் சென்றமைந்து திருவாசகமே அன்பியல் நூல் என்ற முடிவை நமக்கு வழங்கும் என்பதிலே ஐயமில்லை. நக்கீரருடைய இலக்கணமே, திருவாசகத்தில் மிளிரும் அன்பின் திறங்கண்டே அமைத்துக்கொள்ளப்பட்டதோ என்ற ஐயம்கூட எழுகிறது. இறையனார் களவியல் உரை மிகப் பிற்காலத்தே திருத்தி அமைக்கப்பட்டது என்ற கருத்தும், திருவாசகம் மூவர் தேவாரத்திற்கும் முற்பட்டது என்ற கருத்தும் உறுதிப்படுமானால், இந்த ஐயம் உண்மையாகவேகூட அமைந்துவிட இடனுண்டு என்றே நம்பமுடியும்.

சிறு கட்டுரைக்கண் அனைத்தையும் வகைப்படுத்தித் தொகுத்தல் இயலாது என்பதுமட்டுமன்று; தேவையற்றதும் என்பதால் அன்பின் நிலைக்களன்களின்மீது ஒன்றிரண்டு திருவாசகப்பாடல்களை, அல்லது வரிகளைக் கோடிட்டுக் காட்டுவதே திருவாசகச் சித்தனையுள் திளைப்பார்க்குப் போதுமானது என்று கருதுகிறேன். அந்தமுடிவில் 'நோவில்நோதல்' என்ற நிலைக்களத்தை நோக்குகிறோம்.

## புண்சுமந்த பொன்மேனி :

தன்னளவில் நோதல் என்பது இறைவனுக்கு இன்றேனும், அன்பு நெஞ்சம் அவன் நொந்துவாடுவதாகக் கருதி தானும் நோவதனை உலகியல் வாழ்விலும் காணமுடிகிறது.

விண்சுமந்த கீர்த்தியும், பெண்சுமந்த பாகமும் கொண்டு நெற்றிக்கண்சுமந்த கடவுள் தன்பொருட்டு மண்சுமந்தானே என்ற ஆற்றாமையால் விளைந்த கழிவிரக்கமும், மண்சுமந்த பொன்மேனி புண்சுமந்ததே என்ற நெஞ்சத்தின் அழுகையும் அவன் நோவிற்குத் தானும் நொந்து அழியும் மணிவாசகரின் அன்பினை அற்புதமாக எடுத்துக்காட்டும் பாங்கினை அம்மானை விளக்குகிறது.

"பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத் தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்"

என்ற பாடலில் இறைவன் திருமேனி புண்பட்டு நொந்ததாக அன்பால்கருதித் தானும் நோகும் மணிவாசகரின் அன்பின் வெளிப்பாட்டைக் கண்டு மகிழ்கிறோம். மயிலுக்குப் போர்வையும், முல்லைக்குத் தேரும்ஈந்த வள்ளல்களின் செயல்களிலே காணப் படும் நோவில்நோதல் திருவாசகத்துள் இறையன்பாக மலர் வதை அறியமுடிகிறது.

## ஒண்பொருள் கொடுத்தல் :

'வஞ்சித்தென்வளைகவர்ந்தான்' என்ற தொடரும் 'தன் நாமம் கெட்டாள்' என்ற தொடரும் விளக்கும் கருத்துக்களில் தனக்கென ஏதுமின்றி யாவும்தலைவனுக்கே என்று அர்ப்பணித்து விடும் பேரன்பைப் பார்க்கிறோம். அப்பர் பெருமானின் இத் தொடர்களிலும் ஓர்படி மேலே சென்று மணிவாசகர் ஒண் பொருள் கொடுத்து அன்பு செய்யும் நெருக்கத்தைக் கண்டு உள்ளம் நெகிழ்கின்றோம். ஒண்பொருள் கொடுத்தல் என்ற நிலைக்களத்திற்கு முழுமையான இலக்கியமாகத் திகழும் திருவாசகம் நெஞ்சில் தானே வெளிப்படுகிறது. குருந்தமர நிழலில் உன் கோலத்திருமேனி காட்டி, 'என்று ஆட்கொண் டாயோ அன்றே யாவும் நினதாக்கினேன்' என்ற மணிவா சகத்துள் அன்பின் ஆழத்தைஇனங்கண்டுகொள்கிறோம்.

' அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்டபோதே
கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண்
[எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே'

என்ற மணிவாக்கில் அன்பு பூத்துக்குலுங்கிப் பொலிவதனைக் கண்டுகொள்ள முடிகிறது. 'தந்தது உன்றன்னைக்கொண்டது என்றன்னை' என வேறிடத்தும் பலபடப் பேசும் மாணிக்க வாசகரின் அன்பினை 'ஒண்பொருள் கொடுத்தல்' என்ற நிலைக் களத்தே அறிகிறோம்.

## நன்கினிது மொழிதல் :

தன் நாயகனின் பேரியல்புகளை நன்கெடுத்து மொழியும் தலைவியின் நெஞ்சிலேயே திருவாசகத்தை அடக்கிவிட முடியும். ஆன்மநாயகனாகிய சிவபெருமானின் புகழ் பேசுதலன்றி திரு வாசகத்துள் வேறென்ன உண்டு! இறைவனது வியத்தகு

செயல்களை வியக்கும் மணிவாசகரின் நெஞ்சத்தில் ‘ நன்கினிது மொழிதல் ’ என்ற நிலைக்களன் அன்பிற்கு வகை செய்வதைக் காண்கிறோம். சிவபெருமானின் அளவிறந்த ஆற்றல்களுக்கு இப்படி எத்தனை எத்தனையோ திருப்பாடல்கள் உண்டு.

“ விச்சதின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்
புலையனேனை உன் கோயில் வாயிலில்
பிச்சனாக்கினாய்; பெரிய அன்பருக்கு
உரியனாக்கினாய்; தாம் வளர்த்ததோர்
நச்சுமாமரம் ஆயினுங் கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே ”

‘வஞ்சகனை என்னைக்கூட மாற்றி உன் திருவடிக்கு அன்புசெய்ய வைத்த உன் ஆற்றலே ஆற்றல்’ என வியக்கும் வியப்பில திருவாசகத்தின் அன்பியற் புலப்பாடு வெளிப்படுகிறது.

## புணர்வுநனி வேட்டல் :

‘என்பொல்லா மணியை நான் புணர்ந்து நிற்றல்எப்போது’ என வினவும் பல்வேறு திருப்பாடல்கள் ‘ புணர்வு நனிவேட்டல்’ என்னும் அன்பின் நிலைக்களனுக்கு அரண் சேர்க்கின்றன. மணிவாசகரின் இந்த விரைவை,

‘ நெக்கு நெக்குஉள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தால் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனி
திகழநோக்கிச் சிலிர் சிலிர்த்துப்
புக்குநிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே ’

என்ற திருவாசகம் எவ்வளவு உணர்வும் விரைவும் காட்டி விளக்குகிறது என்று கண்டு நிறையும் நிறைவில் அன்பியல் தெரிகிறது.

## பிரிவுநனி இரங்கல் :

தலைவன் பிரிவுக்கு இரங்கும் தலைவியின் ஆற்றாமையிலேயே அகப்பாடல்களின் பெரும் பகுதியாகிய பாலைப் பாடல்கள்

கிளைத்தன என்பர் ஆய்வாளர். ஒன்றைப் பெறுர் படும் வேதனையிலும், பெற்றுப் பிரிந்தார் படும் வேதனையே மிக்கது என்பதனை அறிந்த நமக்கு 'பிரிவு நனியிரங்கல்' என்ற நிலைக்களத்தின் மேல் திருவாசகத்தை வைத்தெண்ணி இனங்கண்டு தெளிவதிலே கடுமையிருக்க முடியாது. பிரிவில் வரும் இரக்கம் தன்னை அவனெடு ஒப்பிட்டு இரங்குதலினும் தன்நிலைக்குத் தானே இரங்குதலினும் - தடுமாற்றத்தினும் விளைவதைக் காதற் பாட்டுக்கள் நன்கெடுத்து இயம்புகின்றன. ஒரு தலைவியின் கழிபெரும் பிரிவிரக்கத்தை மாணிக்கவாசகர் விளம்பும்போது நாமும் அவர் உணர்வுகளோடு கலந்து உருகி அழுகிறோம். அதுதானே திருவாசகத்தின் சிறப்பு!

'உரியேன் அல்லேன் உனக்கடிமை:
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதும்
தரியேன் நாயேன்: இன்ன
தென்றறியேன்: சங்கரா கருணையினல்
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
என்றுன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளிய
அருளும் பொய்யோ எங்கள் பெருமானே'

இறைவன் அருளைக்கூடப் பிரிவாற்ருமையால் 'பொய்யோ' என வினவவைக்கும் தடுமாற்றத்தை அன்பின் வெளிப்பாட்டில் நிறுத்திக்காட்டும் இத்திருப்பாட்டு நெஞ்சு நிறைந்த அருட்பாட்டாகவே அமைகிறது.

இங்ஙனம் வகைப்படுத்தித் திருவாசகத்தை ஊடுருவி நோக்கும்போது களவியல் உரைகாட்டும் அன்பிலக்கணம் முழுதும், இலக்கியமாகத் திருவாசகத்துள் விரிவது தெரிகிறது. முழுமையான அன்பின் இயல்புணர்த்தும் திருவாசகத்தை அன்பிலக்கிய அருள் நூல் என்னுது வேறு எங்ஙனம் அழைப்பது?

---

ஒருவர் கடவுளிடமோ ஒரு தலைவரிடமோ பக்தி விசுவாசங்களுடன் இருப்பாரே யாஞல் அவரிடம் நாணயமும் நேர்மையும் தானே உடன் வளர்ந்துவரும்.

# செய்திகள்

## திருபுவனத்தில் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீகம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானச்சார்பில் சந்நிதி வீதியில் உள்ள, தருமையாதீனம் பதினேழாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த்த ஆலயத்தில் குருபூஜை விழா காலை மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. நண்பகல் மாகேசுவரபூஜையும், மாலையில் சமயச் சொற்பொழிவும் நிகழ்ந்தன. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச் செம்மல், வித்துவான், திரு. வி சா. குருசாமி தேசிகர் அவர்கள் "குருவழிபாடு" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் பலர் வந்து வழிபட்டும் சொற்பொழிவைக் கேட்டும் பயன்பெற்றனர்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையத்தில்

## வேளூர்க் கிருத்திகைப்பிரசாதம் வழங்கும்விழா

சென்னை, சமயப் பிரசார நிலையத்தில் 12—2—73 அன்று, வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா திரு. B. S. சிவகுருநாதன் B. A. B. L., அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில், வேளூர் சென்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியின் அபிஷேக ஆராதனைகளைத் தரிசிக்க வாய்ப்பில்லாதவர்களும் சந்தனக் குழம்பு – விபூதிப் பிரசாதம் பெற வசதியாக இவ்விழா இங்குத் தருமையாதீனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சென்னை மக்களுக்கு இது கிடைத்தற்கரிய பேருக உள்ளது. எல்லோரும் பங்குபற்றிப் பயன்பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். சங்கீதபூஷணம் திரு. மு. கு. புண்ணியகோடி, திரு. N. இராமலிங்கம் ஆகியோரால் வேளூர்த் தேவாரம், திருப்புகழ் முதலியன பாராயணம் செய்யப்பெற்றது. அன்பர்களுக்கு சந்தனக்குழம்பு விபூதிப் பிரசாதம் வழங்கப்பட்டது.

## நாயன்மார்கள் குருபூஜை விழா

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 5—2—73 அன்று அப்பூதி அடிகள் நாயனார் 8—2—73 அன்று கலிக்கம்ப நாயனார், 20—2—73 அன்று எறிபத்த நாயனார் 28—2—73 அன்று காரி நாயனார் குருபூஜைகள் சிறப்பாக நடைபெற்றன. தேவார வகுப்பு ஆசிரியர் மாணவர்களால் திருமுறைப் பாராயணமும், பெரியபுராண விரிவுரையும், அன்பர்களால் வழிபாடும் நிகழ்த்தப்பெற்றன. வழிபாட்டிற்குப் பின்னர் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

## சிவஞானசித்தியார் பாட வகுப்பு

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 4—2—73, 8—2—73, 24—2—73 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் சிவஞானசித்தியார் பரபக்கப் பாடவகுப்பு புலவர், திரு. ந. ரா. முருகவேள் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. அன்பர்கள் பலர் கலந்துகொண்டு கேட்டுப் பயன்பெற்றனர்.

## மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

சென்னை, சமயப் பிரசார நிலைய மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு, மேற்கு மாம்பலம் ஸ்ரீ காசிவிசுவநாதர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. மாதாந்தர வழிபாட்டுக் குழுவினர் சார்பில் ஸ்ரீ காசிவிசுவநாதருக்கும் ஸ்ரீ விசாலாக்ஷி அம்மைக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. சங்கீத பூஷணம் திரு பி. சுவாமிநாதன், திரு. சு. ஞானப்பிரகாசம் இருவரும் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர். வழிபாட்டுக்குப் பின்னர் நிகழ்ந்த சமயப் பிரசாரக் கூட்டத்தில் திரு. ந. ரா. முருகவேள் M. A.; M. O. L., கயப்பாக்கம், திரு. சோமசுந்தரம் செட்டியார், புலவர். திரு. மு. கு, புண்ணியகோடி, வித்துவான். திரு. த. கேசவன், திரு. நா. இராசு, திரு. ஆங்கிரச வேங்கடேச சர்மா, திருமதி. மீனாட்சிசுந்தரசிவை ஆகியோர் கூட்டு வழிபாட்டின் சிறப்புப்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். வித்துவான், ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு இறையருள்பெற வேண்டும் என்று கூறி நன்றி நவின்றார்கள்.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

( பரிதாபிஸு பங்குனிமீ 1உ முதல் 30உ முடிய )

( 14—3—73 முதல் 12—4—73 முடிய )

பங்குனிமாதம் முதல்தேதி புதன்கிழமை புனர்பூசநக்ஷத்திரம் மூன்றாம் பாதத்திலும், மீன லக்கினத்திலும், உதயாதி 3 நாழிகை 30 வினாடிக்கு பிராதக்கால முகூர்த்தத்திலும் சோபனநாம யோகத்திலும் ஸ்ரீலோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் மீனராசிப் பிரவேச ஸங்கிரமணம் செய்கிறார். அதனுடைய பலன் ஸமஸ்த லோகங்களிலும் உள்ள பிரஜைகளுக்கு ஸமஸ்தமங்களமும் உண்டாகும். தக்ஷிண பாரதம் தனதான்ய விருத்தியையும், அமைதியையும் பெறும். சாதுக்கள். பக்தர்கள் ரக்ஷிக்கப்படுவார்கள். தர்மம் ஓங்கும். எங்கும் தெய்வசக்திமுன்னின்று காக்கும், கடவுள் காப்பார். சுபமுண்டாகும்.

### 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை $\frac{1}{4}$

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலன்களைக் கொடுக்கும். அதிகமான அலைச்சல்களையும், சரீரத்தில் வியாதியையும், வீண் செலவுகளையும், மனம் நிம்மதி இன்மையையும் தரும். எல்லாக்காரியங்களும் தாமதத்தோடுதான் நடக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

### 2. ரிஷபம் – கார்த்திகை $\frac{3}{4}$ – ரோஹிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 9 பாதங்களும் பூரணமாக சுபமான பலனைத் தரும். ஸ்திரமாயும் சுகமாயும் உள்ள ஜீவனம் கிடைக்கும். படிப்பு அதிகமாகும். பிரசித்தி ஏற்படும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். வெள்ளி. சனி சுபமாகும்.

### 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். விவாஹாதி மங்கள காரியங்கள் நடைபெறும். தனதான்ய விருத்தி ஏற்படும். குடும்பம் ஓங்கும். பெரியோர்களின் அன்பும், தெய்வ சக்தியும் ஓங்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ஸ்தாவரஜங்கம சொத்துக்களும், கிரயவிக்கிரயங்களும். புதிதான கிரஹ லாபமும், வம்ச விருத்தியும், அதிகமான செலவினங்களும் ஏற்படும். செவ்வாய், புதன் சுபமாகும்.

### 5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். ஜீவனம் ஓங்கும். குடும்பம் ஓங்கும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். மேலோர், பெரியோர்கள் அன்புகிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் பூரணமாக சுபபலனைத்தரும். களத்திர புத்திராதிகளால் விசேஷமான நன்மை ஏற்படும். ஜீவன விஷயத்தில் அதிகப்பொறுப்பு ஏற்பட்டு விருத்தியாகும். புராதனமான தருமங்கள் அதிகமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

### 7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அடிக்கடி சுப காரியங்களாலும், தெய்வகாரியங்களாலும் செலவுகள் அதிகமாகும். ஸ்திரமாயும், சுகமாயும் உள்ள ஜீவனம் ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 8. விருச்சிகம் - விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத் தரும். எல்லாக்காரியங்களும் தாமதமாகவே நடந்துகொண்டுஇருக்கும். எதிர்பாராத நஷ்ட தனங்கள் வந்துசேரும். சுபகாரியங்களும் நடக்கும். தெய்வசக்தி அதிகமாகும். ஆரோக்கியம் உண்டு பண்ணும். புதன், வியாழன் சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் பூரணமாக சுபமான பலனைத் தரும். புத்திராதிகளால் குடும்பம் ஓங்கும். ஸ்திரமான ஜீவனமும், ஆரோக்கியமும் தரும். சகல காரியங்களும் வெற்றியடையும். உலகத்தில் பிரசித்தி ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் பூரணமான சுபத்தையேதரும். கிரகசுகம் ஓங்கும். ஜீவனம் அதிகத் தொல்லையோடு இருந்து கொண்டு இருக்கும். மேலோர் பெரியோர்களின் அன்பினல் சகலமும் சாத்தியமாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½-சதயம் –பூரட்டாதி–¾

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். விவாகாதி சுபங்கள் நடக்கும். வெகுகாலமாக எதிர்பார்த்து நடக்காத காரியங்களும் நடக்கும். குடும்பம் ஓங்கும். ஜீவனம் விருத்தியாகும். செவ்வாய். புதன் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். பொறுப்பான காரியங்கள் அதிகமாக இருக்கும். அதிகமான உழைப்பும் தனவிருத்தியும் உண்டாகும். விவகாரம் ஜெயிக்கும். புதிதான தொழில் ஏற்படும். தெய்வபலத்தால் எல்லாம் சுபமாக நடக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :— பிரவேசகால லக்கினத்துக்கு 4 இல் மிதுனத்தில் பிரபுஸ்தானதிபதியான சந்திரனுக்கு கேது சம்மந்தம் ஏற்பட்டும் குரு சந்திரனுக்கு ஷஷ்டாஷ்டகமும் ஏற்பட்டபடியால் இந்தியாவுக்கு வடக்கு, வடமேற்கு தேசங்களிலும் மத்தியப், பிரதேசங்களிலும் பலவித ஈதிபாதைகளையும், சிரமங்களையும், அமைதி பங்கத்தையும் கொடுக்குமாதலால் உலகம் பூராவும் பிரஜைகளும் இராஜாங்கமும் சந்தோஷமாய் வாழ மகாயக்ஞங்களும், கோடி ஹோமார்ச்சனைகளும் செய்துவர சந்தோஷத்தைத்தரும். சுபம்.

மேற்படி பங்குனிமாதம் 22 ஆம் தேதி (4—4—73) புதன் கிழமை அன்று தெலுங்கு வருஷப்பிறப்புடன் வசந்தநவராத்திரி மகோற்சவம் ஆரம்பம்.